சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தல வரலாறு



சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானம்

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

உ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்
கமடேஸ்வரர் தேவஸ்தானம்

தல வரலாறு

அறங்காவலர் குழுத் தலைவர்

பிரம்மஸ்ரீ. **S. சர்வேஸ்வரன் ஆச்சாரி**

அறங்காவலர்கள்

பிரம்மஸ்ரீ. **K. யுவராஜ் ஆச்சாரி**

பிரம்மஸ்ரீ. **EMS. மோகன் ஆச்சாரி**

பிரம்மஸ்ரீ. **J. ரமேஷ் ஆச்சாரி**

பிரம்மஸ்ரீ. **R. சுப்ரமணி ஆச்சாரி**

தொகுப்பாசிரியர்
புலவர். **ம.கோ. சீனிவாசன் ஆச்சாரி,** எம்.ஏ.,பி.எட்.,
முன்னாள் அறங்காவலர்

வெளியீடு & உரிமை
சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானம்
212, தம்பு செட்டித் தெரு, சென்னை – 600 001.
போன் : 2522 9624
E-mail : kalikambal.chn1@gmail.com
Website : www.chennaisrikaligambal.org

பதிப்பு : 2021
In Public domain. Digitization Muthulakshmi Research Academy
உரிமை : தேவஸ்தானத்திற்கு

ரூ. **50** /-

அச்சிட்டோர்
NATIONAL SCREENS
Triplicane, Chennai - 600 005.
Phone : 2848 4221, Mobile : 98410 25289 / 72000 86889
E-mail : natva2004@yahoo.co.in / natva2004@gmail.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ஜெகத்குரு அகில பாரதிய விஸ்வகர்ம பீடாதிபதி

ஸ்ரீ சிவஷண்முக ஞானாச்சார்ய
குரு ஸ்வாமிகள்

64வது குருமகா சன்னிதானம்

சீனந்தல் மடாலயம், திருவண்ணாமலை - 606 901.

ஸ்ரீமத் பரசமய கோளரி நாத ஆதீனம் - 38வது மடாதிபதி

84, அக்கசாலை விநாயகர் கோயில் தெரு,
திருநெல்வேலி - 627 006.

[illegible]

2-4-2012

அருளார்ந்து அலைதனையே வீசுகின்ற
கடல்தன்னின் அருளார் வோசை
பொருளார்ந்த ஓங்கார மாயொலிக்க
பொங்கிவரும் பேரருள் தனதாகி
அருளோடு ஆன்றதிரு அருள்நிதியும்
வாரிகொடுக்கும் அன்னை காளியே
வருமைநிறை சென்னைமுத்தி யாலுபேட்டை
அமர்ந்திட்ட வருமை யன்றே !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகில பாரதிய விஸ்வகர்ம ஜெகத்குரு

ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவராஜ் ஞானாச்சார்ய குரு ஸ்வாமிகள்

65வது குருமகா சன்னிதானம்

சீனந்தல் மடாலயம், திருவண்ணாமலை - 606 901.

ஸ்ரீமத் பரசமய கோளரி நாத ஆதீனம் - 39வது மடாதிபதி

84, அக்கசாலை விநாயகர் கோயில் தெரு, திருநெல்வேலி - 627 006.

நல்லாசி உரை

த்யாநம்

ஏகவக்தராம் த்ரிநயநாம் ஊர்த்வகேச சமாந்விதாம் !
ஸ்யாமவர்ண சமாயுக்தாம் சதுர்தோர்தண்ட மண்டிதாம் !!
சூலம் டமருக ந்சைவ கபாலம் பாச றேவச !
பிப்ரதீம் புல்ல நயநாம் தாநா பரண பூஷிதாம் !!
ப்ரஸந்த வதநாம் தேவீம் துகூல வஸநோ ஜவ்லாம் !
சிம்ஹாதி ரூடாம் பத்ரப்த்யை பத்ரகாளீம் மஹம் பஜே !!
அனேக வேதோக்த மஹாசாசீர் வசனம் உபய குசலம் ;
நலம் நலமே விளைக நிற்க.

அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய தல வரலாற்று நூல் மறு பதிப்பிடுதல் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி.

தருமமிகு சென்னை என்று அருட்பிரகாச இராமலிங்க அடிகளார் புகழ்ந்துரைக்கும் சென்னை தம்பு செட்டி தெருவில் அமைந்துள்ள எம் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய அறங்காவலர்கள் பிரம்மஸ்ரீ S.சர்வேஸ்வரன் ஆச்சாரியார் ; பிரம்மஸ்ரீ K. யுவராஜ் ஆச்சாரியார் ; பிரம்மஸ்ரீ EMS. மோகன் ஆச்சாரியார் ; பிரம்மஸ்ரீ J. ரமேஷ் ஆச்சாரியார் ; பிரம்மஸ்ரீ R. சுப்ரமணிய ஆச்சாரியார் அவர்களின் சீரிய முயற்சியில் ஆன்மீக செயல்பாடுகள் வெகு சிறப்பாக நடைபெறுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது. இப்பிரபஞ்ச சிருஷ்டி செய்யும் பொருட்டு முதலில் தோன்ற பரபிரம்மமே அன்னை ஸ்ரீ பராசக்தி என்று "சாக்தம்" என்ற அடிப்படையில் கூறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னை ஸ்ரீ காளி மஹா ப்ரளய காலத்தில் ஸர்வ பூதங்களையும் அழிப்பதால் சிவனுக்கு மஹா காலன் என்று பெயர். ப்ரபஞ்ச அழிவிற்கு பிறகும் காளி ஒருவளே அனைத்திற்கும் சாட்க்ஷியாக நிற்பதனால் அவள் மஹா ப்ரளய சாக்ஷினி என லலிதா ஸஹஸ்ர நாமம் கூறுகின்றது. காலன் அழிந்த பிறகும் காளி இருப்பதால் காலஸ்ய காலனாத் காளி எனவும் பெயர் பெறுகின்றாள் ப்ரபஞ்ச உற்பத்திக்கு முன்பும் இருந்ததால் இவள் ஆதி காளி எனப்படுகின்றாள். காலன் சிவனின் பத்னி என்பதாலும் காளி எனப்படுகின்றாள்.

காளி கல்பத்ருமம் என்ற நூலில் காளி என்ற சொல்லில் க ; ஆ; ல; ஈ என்ற நான்கு அக்ஷரங்கள் உண்டு. க என்றால் பிரம்மா ஆ என்றால் ஆனந்தம் ல என்றால் விஸ்வாத்மா ஈ என்றால் சூக்ஷ்மம் என பொருள்படும். ஸ்ருஷ்டி (படைத்தல்) ஸ்திதி (காத்தல்) ஸம்ஹாரம் (அழித்தல்) என்ற முத்தொழிலும் புரிபவள் " கலயதீத காளீ " என்றும் அழைக்கப்படுகின்றாள்.

கலியுகத்தில் வேண்டிய வேண்டியாங்கு வரங்களை சீக்கிரம் சிறப்பாய் அளிப்பவள் "காளி". இக்கருத்தினை கீழ்கண்ட மந்திரம் உறுதி செய்கிறது.

ஸதா ஸர்வ யுகே தேவீ கலிகாலே விசேஷத : !
ஸர்வ ப்ராணி ஹிதகரபோக மோனக்ஷக காரணம் !!
விஷேத: கலியகே ஜீவனாமாசு ஸித்தம் !
காளிகா மோக்ஷதா தேவி கலௌ சீக்ர பலப்ரதா !!

காளி உபாசனை : காளி கல்பதரு என்ற நூலில் ஹனுமான் ; விக்னேஸ்வரன் ; இந்திரன் ; பரசுராமர் ; கங்கை ; லக்ஷ்மி ; சூரியன் ; சந்திரன் ; இராவணன் ; குபேரன் ; வாயு ; குரு ; சுக்ரன் ; பூமி ; ராகவன் ; பரதன் ; ப்ரஹலாதன் ; சுகதேவர் ; க்ஷேத்ரபாலகர் என பலர் தேவியின் உபாசனை பெற்றவர்கள் என பட்டியலிடுகின்றது. மேலும் ப்ரம்ஹா ; விஷ்ணு ; சிவன் ; கௌரி ; லக்ஷ்மி ; கணபதி ; சூரியன் போன்ற தேவர்களும உபாசகர்களே. மேலும் மகாகவி காளிதாசன் ; கவிராஜ காலமேகம் ; கவிச்சக்ரவர்த்தி கம்பர் ; பாரதியார் ; அபிராமி பட்டர் என பலரும் காளியின் உபாசகர்கள் அன்றோ ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயான வாசினி என்றாலும், கோர ரூபம் உடையவள் என்றாலும் ; அவள் மங்கள ரூபினி ; மங்களம் அளிப்பவள் ; பக்தர்கட்டு சௌம்யிய (வசீகர) தோற்றத்தோடு காட்டி அளிக்கின்றாய் என மூர்த்தி ரஹஸ்யம் பின்வருமாறு கூறுகின்றது.

ரூப ஸௌபாக்ய காந்தீனாம் ஸா ப்ரதிஷ்டா பரக ஶ்ரீயாம் என்கின்றது. புரச்சர்யார்ணவம் என்ற நூல் ஒன்பது காளி தேவியினையும் : ஜயத்ரதயாமள தந்திரம் என்ற நூல் ஏழுகாளிகள் எனவும், ஸ்காந்த புராணம் எட்டுவித காளிகள் எனவும் கூறுகின்றது.

ஸத்யம் ஞானமயீ ! சாக்ஷாத் பரபிரம்ம ஸ்வரூபி
பிரம்மா ; விஷ்ணு ருத்ர அஸ்ய புக்ர :
பதி பரபிரம்ம சாக்ஷாத் சதாஸிவ : தஸ்ணம
ஶ்ரீ ஜெகதாத்ரி சைவ விஸ்வேஸ்வரி
இத்தரு அன்னையின் பெருமையை உணரவே
சிவனே தாயும் ஆனார் அல்லவா ;

அவரே முதல் ஶ்ரீவித்யா உபாசகர் அன்றோ : நமது அன்னை காளிகா பரமேஸ்வரி சாந்த ஸ்வருபி வேண்டிய வேண்டியாங்கு நல்குபவள் : அவளை வழிபட்டால் ஒளிசேர் நவமனைத்தும் ஒருங்கே பெறலாம், அவளை வணங்கி பெங்கும் வளமும் பல நலனும் பெற அன்னையை வேண்டி ஆகியன தழைத்து அருகென படர்ந்த கால நாள் பூமியில் நீடு வாழ்க ! வாழ்க !! என எம் வாய் மணக்க வாழ்த்துகின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ஜெகத்தரு அகில பாரதிய விஸ்வகர்ம பீடாதிபதி

ஸ்ரீ சிவசண்முக ஞானார்ச்சர்ய குரு சுவாமிகள்

இயற்றிய

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் க்ஷேத்திர பதிகம்

பெருங்கருணை யெணபுகல பேசரிய
பேரருள்நிலை பொருந்திய தெனலாம்
அருங்கருணை பிந்துதி ரிகோணவ
றுகோணமாகி அருள்ஷட் கோணமாய்
வருங்கருணை சதசாரதாவாய் தான்நின்று
உலகனைத்தும் வாழச்செய் தாயாகி
இருந்துகருணை தனையேகாட் டுங்காளிகா
தேவியாகி இருந்துவா ழவைக்கும்

போற்றுகின்ற அடியார்கள் மன்னராக்கி
இலக்குமியின் புத்திர ராக்கும்
வெற்றியருள் தனிவாகும் வதிந்தமா
அரசராக்கும் போற்றி நிற்கில்
உற்றதெல்லாம் தானருளி உயர்த்திடும்
யெம்மன்னை உயர்ந்த காளியே
எற்றமுற யெத்திசையும் புகழ்மணக்க
உத்தமராய் என்றுமே அருளும்

கற்றோரும் மற்றோரும் மதித்துனை
பற்றிடுவோர் கனிவுபெற்று
மற்றோர்க்கு உதவுகின்ற அருள்சீலர்
யென்றுசொலி மதிக்க வைக்கும்
யேற்றமுற இருநிதியை யேற்றோர்க்கு
இனிதீய யெங்கள் அன்னை
உற்றதாயாய் உடனிருந்து உறைவோர்க்கும்
என்றுமனம் யேற்றம் தருமே

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்திக்கும் புகழ்மணக்கும் பத்தழகு
தானமர்ந்து எழிலார் தமிழே
உத்தமமதாய் உலகிலுறு மொழிகளிலே
கொண்டதொரு அழகமைந் ததெனவே
மெத்தபுகழ் சென்னைமுத்தி யாலுபேட்டை
தனிலமர்ந்து மேன்மை மேவும்
பத்திதன்னோ டார்ந்துபணி வோர்க்கெல்லாம்
பரந்தநிலை பரிந்து தருமே

தருகின்ற தன்மையது மிகவோங்க
அருள்காட்ட தாய்தன் அருளே
வெருகின்ற பேரருளே பிறங்குமொரு
அடியார்கள் பொருந்தும் தவமே
வெரும்பேறு பெற்றிட்ட விசுவகுலம்
தன்தெய்வம் பேரரு ளார்ந்து
தருகின்ற யெல்லார்க்கும் வெற்றமுடன்
தருகின்றாள் தாயாய் பரிந்தே

தாயாகி காளிகையே கற்பனைக்கு
மெட்டாத தன்மை தனையே
வாயார பேசுதற்கு வாய்கூசும்
வணங்குவோர்க்கு வாழ்வே வருமே
வோயரது தானவளை தரிசிப்போர்
தனதானியம் வோங்கி வெருகும்
சேயாகி தானுவந்து தாயாகியே
தான்தருவாள் சென்னை காளியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதுமறையோர் முதுகலைகள் தானுணர்ந்து
தானறிந்த முத்தியா லுபேட்டை
கதுமெனவே தான்வந்தால் தளராது
அருள்காட்டும் காளிகா தேவியே
பதுமமல ரனையயெம தரியதாய்தான்
வணங்கினால் பரிந்து செல்வம்
தீதுயிலா இன்னருலும் இனியவளாய்
தான்தருவாள் தாயாய் வந்தே

தானுவந்து தம்புசெட்டி நன்மருகே
கனகமயம் தாண்கொன் டென்றும்
பானுவென வொளிவீசி விரிந்தபுகழ்
தான்நல்கி பரிவு சுவ்ந்து
நானுனது தாயாகியே நின்னருளை
காட்டுதற்கே நின்திரு வருளன்றே
எனுமான்ற அருளாகி தன்றாலும்
யேற்றசென்னை எழிலார் நகரில்

சென்னைநகர் வாழ்விசுவ நண்பர்கள்
வளம்வெறவே செய்த தவமாகுமே
அன்னைகாளி காபரமேஸ்வ ரியெம்மன்னை
ஆர்ந்ததென அவர்தன் பாதமே
என்றென்றும் தவறாது தான்பணிந்து
அன்னவளே ஏற்ற தெய்வமாம்
இன்புருகி இருப்பவரே யென்றென்றும்
யேற்றமுடன் இனிது வாழ்வார்காள்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ வீர பிரம்மங்காரு மடாலயம்
ஸ்ரீ விராட் போத்தலூரி வீரபிரம்மேந்திர அன்னதான அறக்கட்டளை

அணிந்துரை

விஸ்வகர்ம சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயிலின் தல வரலாற்று நூல் வெளியிடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். நம் விஸ்வகர்ம குலத்தில் அவதாரம் செய்தவரும், உலகப்புகழ் பெற்று காலக்ஞானம் என்னும் நூலை எழுதியவருமான ஸ்ரீ வீரப்பிரம்மங்கார் சுவாமிகள் பரம்பரையில் வந்த எனது பாட்டனார் அவர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகைத் தந்து அம்பாளை தரிசித்தும், விஸ்வகர்ம நிர்வாகத்திற்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளார்கள். தற்போது இத்திருக்கோயிலுக்கு வருகைப்புரிந்த வீரபுட்லய்யா சுவாமிகளை பூரண கும்ப மரியாதையுடன், தற்போது புதியதாக 01.10.2020 பதவியேற்ற இத்திருக்கோயிலின் விஸ்வகர்ம அறங்காவலர்கள் வரவேற்றுள்ளனர். இத்திருக்கோயிலிலுள்ள வீரபிரம்மங்கார் சுவாமிகளுக்கும், அவருடைய பிரதானசீடர் சித்தையாவுக்கும் சன்னதி அமைத்து நித்தியப்படி பூஜைகளும், பிரதி பௌர்ணமி, மகா சிவராத்திரி ஜீவ சமாதியடைந்த நாள் ஆகிய தினங்களில் விசேஷ பூஜைகளும் நடைபெறுவதையறிந்து அளவில்லாத ஆனந்தம் அடைந்தார்கள்.

சென்னை உயர்நீதிமன்றம் நிர்வாகத் திட்டம் சி-எஸ். 62/1933ன் படி இத்திருக்கோயில் சென்னை நகரத்தில் வசிக்கும் விஸ்வகர்ம சேவார்த்திகளால் மூன்று ஆண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து அறங்காவலர்களால் சிறப்பாக நிர்வாகம் செய்யப்பட்டு வருவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

காசியில் பிறந்து கர்நாடக மாநிலத்தில் வளர்ந்து தனது சிறுவயதில் தீர்த்த யாத்திரையை ஆரம்பித்த மகான் ஸ்ரீ வீரபிரம்மேந்திர சுவாமிகள் தென் தமிழகம் முழுவதும் பயணித்து சென்னையில் ஸ்ரீ காளிகாம்பாள் தரிசனம் செய்து அதன் பின்னரே ஆந்திர மாநிலம் சென்று தெலுங்கு மொழியில் காலக்ஞான வாக்கியங்கள் எழுதினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆந்திர மாநிலம் பனகானபள்ளியில் காளிகாம்பாள் சுவாமிகளுக்கு காட்சி தந்து ஆசிர்வதித்தார். அந்த இடத்திலேயே சுவாமிகள் ஆத்ம லிங்கம் பிரதிஷ்டை செய்து காளிகாம்பாளுக்கு உருவம் செய்து பூஜித்து தியானித்து காளிகாம்பாள் வாக்கியம் எழுதினார். அந்த இடம் தற்போது நேலமடம் (பூமி மடம்) என்று அழைக்கப்படுகிறது. அந்த வரலாற்று நினைவாக சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கோவிலில் 1999ம் ஆண்டு பக்தர்களால் சுவாமிகளுக்கும் அவரின் சீடர் சித்தையாவிற்கும் பஞ்சலோகத்தல் சிலை பிரதிஷ்டைசெய்யப்பட்டது.

மேலும் தற்போதுள்ள அறங்காவலர்குழு முயற்சியால் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் மாலை நேரத்தில் ஸ்ரீ வீரபிரம்மேந்திர சுவாமிகளுக்கும் ஸ்ரீ விஸ்வகர்மா ஸ்ரீ காயத்ரி தேவிக்கும் தொடர்ச்சியாக அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, நெய்வேத்தியம் நடைபெற்று வருகிறது.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டாக்டர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
76/96, இராமசாமி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

அணிந்துரை

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானத்தின் தல வரலாற்று நூல் தங்களின் கைகளில் தவழும் இந்நூலானது தமிழ் மொழியின் மீதும் சமயத்தின் மேலும் ஆழ்ந்த அன்புடைய மதிப்பிற்குரிய புலவர் பிரம்மஸ்ரீ ம. கோ. சீனிவாசன் ஆச்சாரி அவர்களின் சிறந்த முயற்சியினால் தொகுக்கப்பட்டு, நமது ஆலயத்தின் அறம் காப்பவர்களே – அறங்காவலர்கள் என்ற பெயருக்கேற்ப சிறந்த அறங்களை நாங்கள் ஆற்ற எங்களுக்கு எப்பொழுதும் முழுமையான ஒத்துழைப்பை அளித்து வரும் பிரம்மஸ்ரீ S.சர்வேஸ்வரன் ஆச்சாரி, பிரம்மஸ்ரீ K. யுவராஜ் ஆச்சாரி, பிரம்மஸ்ரீ EMS.மோகன் ஆச்சாரி, பிரம்மஸ்ரீ J. ரமேஷ் ஆச்சாரி, பிரம்மஸ்ரீ R.சுப்ரமணி ஆச்சாரி ஆகியோரின் சீரிய வழிகாட்டுதலின்படி வெளியிடப்படுகிறது.

தொகுப்பாசிரியரின் ஆழ்ந்த அனுபவத்தின் பயனாக நமது காளிகாம்பாள் ஆலயத்தில் வீற்றிருக்கும் அனைத்து தெய்வங்களைப்பற்றிய குறிப்புகளையும், பக்தர்கள் வழிபட எளிமையான பாக்களையும் தொகுத்து அளித்து உள்ளது சிறப்பாக அமைந்துள்ளது. நமது ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் காளிகையை பற்றி மட்டுமல்லாமல் பொதுவாக காளி என்கிற தத்துவத்தை தாங்கி பக்தர்களை காப்பாற்றி வரும் தெய்வத்தைப் பற்றியும், அத்தெய்வ சக்தியை வழிபட்டவர்களின் விவரங்களையும், அவர்கள் அருளிய பாடல்களையும் தொகுத்தளித்திருப்பது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணங்களில் இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் காளியைப் பற்றிய குறிப்புகளுடன் ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீசக்ரத்தினையும், சத்ரபதி சிவாஜி மகாராஜா வழிபட்டவை போன்ற செய்திகளையும் ஆசிரியர் அவர்கள் தெரிவித்திருப்பதற்கு பக்தர்களின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறங்காவர்களின் ஆன்மீகப் பணி மேன்மேலும் வளர்ந்து இவ்வாலயம் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்க எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பாளை பிரார்த்திக்கிறேன்.

வாழ்க இந்தியா !

அண்ணாமலையார் அடிமை
தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
சென்னை

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். குறள்

இறைவன் நமக்கு உள்ளேயும் வெளியேயும் இறைந்து கிடப்பவன். காலத்தாலும் இடத்தாலும் நமக்குள்ளும், நம்மைக் கடந்தும் இறைந்து கிடப்பவன் இறைவன். கண் முன்னே ஆளும் அரசனாகிய இறைவன் போலக் கண்ணுக்குத் தெரியாமல் தலைமைத் தாங்கி ஆள்பவன் இறைவன்.

நீர் பாய்ச்சுதலை நீர் இறைத்தல் என்கிறோம். நீர் பாய்ச்சுவது போலத் தன்னை நமக்குள் பாய்ச்சுபவன் இறைவன்.

இறை என்னும் சொல் தோளைக் குறிக்கும். நமக்குத் தோள் கொடுப்பவனை இறைவன் என்கிறோம்.

காப்பாற்றுதல், முறைசெய்து காப்பாற்றுதல் குற்றத்துக்குத் தண்டனை வழங்குதல் போன்ற செயல்களைப் புரிந்து தலைவனாக விளங்குவதால் கடவுளும், அரசனும் இறைவன் எனப் போற்றப்படுகின்றனர்.

அகில உலகத்தையும் அண்ட சராசரங்களையும் தன் அன்பால் ஆளும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி ஸ்ரீ காளிகாம்பாள் பொற்பாதம் வணங்கி என் அணிந்துரையைத் துவங்குகிறேன்.

நமது நாடு, நமது மொழி, நமது இலக்கியம் அதன் சிறப்பு இதுவென அறிந்து கொள்ளலாம். இறைபக்தியில்லா இலக்கியம் இல்லை. வேறுபட்ட சயங்களானாலும் சரி, மொழி வளர்ச்சியானாலும் சரி, அதில் இறைபக்தியினையும் கலந்தே தந்தனர்.

'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றும் திருவள்ளுவரின் வாக்கே உண்மயாகும் என்பதை உணர்வோமாக. குரங்கு ஒரு கிளையிலிருந்து நீங்க வேண்டுமாயின் மற்றொரு கிளைக்குத்தான் தாவிச் சென்று அடையும். அக்கிளையை விட்டு நீங்கும். மற்றொரு கிளை இல்லையெனில் அக்குரங்கால் அக்கிளையினை விட்டு நீங்க முடிவதில்லை. அவ்வாறே உலகியலில் வைத்த பற்றினை அதாவது மனத்தினை அதனின்று நீக்க வேண்டுமாயின் அம்மனத்திற்கு வேறொரு புகலிடம் வேண்டும் அப்புகலிடமாக உள்ளவனே இறைவன். இறைவனிடம் அன்பு நிறைந்து மனம் சென்று வழிபட்டால் அவனுடைய அருள் வலியால் உலகியலினின்று மனம் நீக்கப் பெற்று நிலை கொள்ளும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகியல் பற்றினை அறுத்தற்கு உத்தமனாகிய இறைவன் பற்றினைக் கொள்ளுதல் வேண்டும். இறைவன் பற்றினைக் கொள்ளாது பற்றறுக்கவியலாது. எனவே உலகப் பற்றை அறுக்க உத்தமன் பற்றைக் கொள்ளுதல் வேண்டும் என்ற உண்மையினை

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு

என்றும் மறை மொழியால் உணர்த்துகின்றார் முப்பால் நூலார் உலகில் ஆயிரம் அன்னைகள் இருந்தாலும் அன்னைக் கெல்லாம் அன்னையாய் விளங்கும் ஸ்ரீ காளிகாம்பாள் அன்னையைக் காண கண்கோடி வேண்டும். அப்பேற்பட்ட லோகநாயகி தருமமிகு சென்னையில் வீற்றிருப்பதும் அன்னையின் திருத்தலத்தை நம் விஸ்வகர்மா சமுகத்தினர் பாதுகாத்து அறப்பணிகளைச் செய்வதும் வேறெந்த சமுதாயத்துக்கும் கிடைக்காது நமக்குக் கிடைத்த பெரும் பேறாகும். அன்னையின் திருவருளாள் நம் விஸ்வகர்மா சமுதாயம் தழைத்தோங்கி உயர்வுப் பெற்றது. அன்னை காளிகாம்பாளின் திருவடிகளைப் பற்றி கொண்டால் நாம் அனைத்து வளங்களையும், நலன்களையும் பெறமுடியும். உலகம் அனைத்திற்கும் ஒளியாய் திகழும் நம்அன்னை உலகின் அனைத்து ஜீவராசிகளிலும் வாசம் செய்பவள். இதனால் தான் பாரதியார்.

'யாதுமாகி நின்றாய் காளி' என்று நம் அன்னையின் புகழை பாரெங்கும் பரப்பினார்.

மராட்டிய மன்னர் மாவீரன் வீரசிவாஜி அவர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகை புரிந்து ஸ்ரீ காளிகாம்பாளை தரிசித்து சென்றது வரலாறு.

நல்லது செய்தல் ஆற்றிராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் என்றும்

சங்க இலக்கிய கருத்தினை நினைவில் கொண்டு இக்கால மாந்தர்களுக்கு அறிவூட்டும் வகையில் தமிழ் இலக்கியங்களில் உள்ள இறைபக்தியினை தொகுத்து இருப்பது வரவேற்கத்தக்கது.

திவ்யத்துவம் பொருந்திய இத்தல வரலாற்றினை சிறப்பான முறையில் தொகுத்தளித்து நாடு சிறக்க வழிவகுத்த மறைந்த நம் முன்னாள் அறங்காவலர் புலவர். கோ. கண்ணன் அவர்களை உளமார பாராட்டி மகிழ்கின்றேன்.

அன்போடு வாழ்க
அன்னையருள் பெறுக

பிரம்மஸ்ரீ. **S. சர்வேஸ்வரன் ஆச்சாரி**
அறங்காவலர் குழுத் தலைவர்
சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர்
தேவஸ்தானம், சென்னை – 1.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். – குறள்

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் நாவுக்கரசரின் கூற்றுக்கிணங்க என் வாழ்நாள் முழுவதும் அன்னை காளிகாம்பாளின் பொற்பாதங்களுக்கு சேவை செய்யும் தொண்டனாகவே வாழ்ந்து வருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீராம கிருஷ்ண பரம்ஹம்ச கீதையில் வரும் சம்பவம் இது. இதை உற்று நோக்கி உங்கள் வாழ்வை பக்தி மார்க்கத்தில் செலுத்துங்கள் என்னதான் உங்களின் நம்பிக்கை, திறமை, செல்வம், பின்புலம் யாவும் வலுவானதாக இருந்தாலும் பகவானின் மீது நீங்கள் கொண்ட பக்தி உங்களைக் காப்பாற்றும் என்று இந்த உதாரணத்தின் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் எத்துனை அழகாக விளக்குகிறார் பாருங்கள்.

ஒரு தகப்பன் இரு குழந்தைகளை அழைத்து கொண்டு காட்டு வழியே செல்கிறான். இளையபிள்ளை தகப்பனின் தோளின் மீது அமர்ந்து கொண்டிருக்கிறான். மூத்த பிள்ளையோ தகப்பனின் கரங்களை பிடித்தபடி நடந்து வருகிறான். சிறிது நேரத்தில் வானத்தில் பெரும் கழுகு ஒன்று பறந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட மூத்தபிள்ளை அப்பா அதோ பாருங்கள் எத்தனை பெரிய கழுகு என்று கூவி மகிழ்ந்தான், கழுகினைக் கண்ட இளையப் பிள்ளை அப்பாவை அழுத்திக் கட்டிக் கொண்டான் இன்னும் கொஞ்ச நேரத்தில் அழகிய பறவைகள் கூட்டம் ஒன்று அவர்கள் தலைக்கு மேலே விரைந்து சென்றது. இதைக் கண்டதும் இரு பிள்ளைகளுமே கைகளை தட்டி மகிழ்ந்தனர். வளர்ந்த பெரிய பிள்ளையோ மன மகிழ்ச்சியால் மேலும் துள்ளி குதித்தான் இதனால் அப்பாவின் கைப்பிடியை நழுவ விட்டுவிட்டான். இதனால் கால் தடுக்கி கீழே விழுந்து காயம் அடைந்தான்.

சிறிய பிள்ளையும் கைகளை தட்டி மகிழ்ந்தாலும் அவன் கீழே விழவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏன் என்றால் அவனை தகப்பன் சுமந்து கொண்டிருந்தான் முதல் பிள்ளை தன்னம்பிக்கை கொண்டவன் என்றாலும் இளைய பிள்ளை கடவுளால் அரவணைக்கப்பட்டவன். ஒரு முறை கீழே விழவில்லை என்றாலும் மறுமுறை விழும் போது காயம் அடைந்தான் மூத்தபிள்ளை. இளைய பிள்ளையோ முதலில் பயந்தாலும் எப்போதுமே அவன் தகப்பனின் தோளில் பாதுகாப்பாக இருந்து வருகிறான். யோசித்துப் பாருங்கள் இந்த சிறு சம்பவம் உங்களுக்கு எண்ணற்ற சிந்தனைகளை உருவாக்கித்தரும். அப்போது இறைபக்தி எத்தனை அவசியம் என்பதை உங்களுக்கு உணர்த்தும்.

அன்னையின் அருட்சக்தியை ஆன்மீக உலகில் பரப்பிட ஆன்மீகத் தொண்டனாய்ச் செயலாற்ற மூன்றாவது முறையாக அறங்காவலராக என்னை நியமித்திருக்கிறாள்.

சென்னை தம்புசெட்டித் தெரு முனையில் நுழைந்ததும், ஆன்மீக பூமியில் நுழைந்தது போல் சாரை, சாரையாய் மக்கள் வெள்ளம். அம்பாளின் அருளை நெற்றியில் குங்குமமாய் காண அன்னையின் புகழ்பாடிச் செல்லும் திருக்கூட்டம், வீதியெங்கும் வீசும் மங்கலப் பொருள்களின் நறுமணம். மாசிலாக் கடல்காற்றும் மணக்கும் விந்தையோ விந்தை.

இறைப்பணி செய்ய மூன்றாம் முறையாக என்னைத்தேர்ந்தெடுத்த விஸ்வகர்ம சொந்தங்களுக்கு என்மனமாற நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ அம்பாளின் அருளோடு ஆன்மிகத் தொண்டனாய் என் பணிகளை மேலும் தொடர்வதற்கு அன்னையின் அருளை வேண்டுகிறேன்.

யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் திருமூலரின் வாக்கிற்கேற்ப நான் பெற்ற அம்பாளின் அருள் கடாக்ஷத்தை தாங்கள் அனைவரும் பெற எல்லாம் வல்ல அன்னையை வேண்டுகிறேன்.

பிரம்மஸ்ரீ. **K. யுவராஜ் ஆச்சாரி**
அறங்காவலர்
சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர்
தேவஸ்தானம், சென்னை – 1.
தலைவர்
ஸ்ரீ விராட்விஸ்வ பிரம்ம காயத்ரி வழிபாட்டுக்குழு

 Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

பற்றுக பற்றாற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு குறள்

இந்திய திவ்ய தேசத்தின் வரலாற்றில், சமயம் சார்ந்த ஆன்மீகமும், அரசியலும், பிணைப்பில் இருந்தாலும், இந்து சமயத்தின் ஆன்மீகத்தில், வடக்கே கைலாயமும், நடுவே வைஷ்ணவா தேவியும், தெற்கே குமரி அன்னையும், அரணாய் அமைந்தாலும், தமிழகத்தின் தலைநகரம் சிங்காரச் சென்னைப்பட்டினத்தின் வங்கத்தின் வாயிலில், சென்னியம்மனாய்த் தோன்றி, சிலை வடித்தோரின் சமுதாயம் மேம்படச் சென்னை மாநகரில் வாழும் மக்களின் காக்கும் அரணாக, தம்புச்செட்டித் தெருவில் குடி கொண்ட தாயே! எங்கள் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள்.

உனைக் கண்டுப் பணிந்தோரின் வாழ்வு உயர்ந்தது தாயே ! வாள் ஏந்தி வந்தார்க்கு அருள் பாலித்த தாயே ! பாரதி கண்ட மாங்காளியே ! உன் ஆலயப் பணி செய்ய, சேவகனாய் எனை நியமித்தாய். நித்தம் நினைத்து, ஆனந்தக் கண்ணீர் கசிந்து, பொறுப்பு ஏற்றேன் அறங்காவலராய், தாயே ! நாளும் உனக்கு ஆற்றும் பணி, என் வாழ்வின் பிறப்பின் பயன் என்று, மனம் உருகி, உன் நாமாவளி துதித்து இருப்பேன், தாயே ! உன் சேவகனாய் பணியாற்ற, என்ன தவம் செய்தேன், சிம்மத்தின் எதிர் திசையில் அமர்ந்து, மேற்குத் திசை நோக்கி, சிம்மாசனத்தில், அர்த்தப் பத்மாசமாய், வலக்கால் தொங்கவிடப் பட்ட நிலையில், அமர்ந்து மணிமகுடம் சூட்டி, தாழம்பூ கிரீடம் அணிந்து, வண்ணப் பட்டாடை உடுத்தி, மகிழம்பூ மாலை அணிந்து, அங்குசப் பாசம் மேற்கையில் ஏந்தி, தாமரை வரத முத்திரையுடன், மூக்குத்தி மின்ன, மரகதப் பதக்கப் பொன் தாலியும், ஒட்டியானமும், கொப்புக் குழைக் கங்கணம், பாத சிலம்பு மின்ன, பொன்னும், பொருளும், மாங்கல்யம் தந்த மணவாளன், பரம்பொருள் கமடேஸ்வரர் இடம் அமர்ந்து, இச்சா சக்தி, மந்திர ஞான சக்தி, கிரியா சக்தி, படைத்து எந்திரம் அது ஸ்ரீ சக்கர மகா மேருவின் முன் அமர்ந்த, சர்வ மங்கள காரணியாகவும் சாந்த ஸ்வரூப காமாட்சியாகவும் எழில் கோலம் காட்டும் என் அன்னையே! உனைக் காணக் கண்கோடி வேண்டும்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

பிரதி வாரந்தோறும் வியாழக்கிழமை தேவஸ்தானத்தின் சார்பாக நமது காளிகாம்பாள் ஆலயத்தில் வீற்றிருக்கும் வீர பிரம்மேந்திர சாமி, ஸ்ரீ விராட் விஸ்வகர்மா சாமி மற்றும் தாயார் காயத்ரி தேவி, ஆகிய மூன்று தெய்வங்களுக்கும், அபிஷேகம், அலங்காரம், தீப தூப ஆராதனைகள், திருக்கோயில் சார்பாக விஸ்வகர்மா பக்தகோடிகள் கூட்டு முயற்சியில், நம் ஐந்தொழில் புரியும் விஸ்வகர்மா தொழில் வளர்ச்சிக்கும், அனைத்து சேவார்த்திகள், குடும்ப ஷேமத்திற்காகவும், வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

நமது ஆலய முழுவதும் நடக்கும் சிறப்பு விழாக்கள் : ஆங்கில வருடப்பிறப்பு, தை வெள்ளி, மாசிமகம், தமிழ் வருட பிறப்பும், அதில் பஞ்சாங்கம் வாசிக்கும் சிறப்பு அம்சமும், வசந்த நவராத்திரி, பிரம்மோற்சவம், வசந்த உற்சவம், ஆடிப்பெருவிழாவின் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பால்குடம்.

பால்குடம் சிறப்பு அம்சம் யாதெனில், திருமண தடை நீங்கவும், புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கும், அந்த பாக்கியம் அம்பாள் அருளால் கிடைக்க பெறுவது, மாபெரும் வியப்புக்குரிய உண்மையாகும். அது போல் தொடர்ந்து பத்து வாரம், ஞாயிற்றுக்கிழமை தோறும், வெவ்வேறு அபிஷேகம் அதிசயத்தக்க வகையில் அம்பாளின் அருளோடு நடைபெறுகிறது. சாரதா நவராத்திரி மற்றும் வடகதிர்காம ஆலயத்தில் கந்தசஷ்டி விழாவில் முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாகவும் நடைபெறுகிறது. அதுபோல திருக்கோயிலில் வீற்றிருக்கும் மணி வேலுக்கும் வேல்காவடி, ஷஷ்டி அன்று வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. கார்த்திகை பெருவிழா, மாணிக்கவாசகர் ஆருத்ரா அரைக்கட்டு உற்சவம் ஆகிய பெருவிழாவாக நடைபெறும் ஆலயம் நமது காளிகாம்பாள் ஆலயமே, அதே போல் எந்த ஒரு விழா ஆனாலும் சரி, அபிஷேக ஆராதனைகளாகட்டும் பக்தர்கள் வருகையாகட்டும் சரி நமது ஆலயத்துக்கு நிகர் நமது ஆலயமே.

என்றென்றும் அம்பாளுக்குக் கடமைப்பட்டவன்,
உங்களின் சொந்தக்காரன்...
பிரம்மஸ்ரீ. **E.M.S. மோகன் ஆச்சாரி**
அறங்காவலர்
சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானம்,
சென்னை – 1.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். - குறள்

வடக்கே காளியாகவும், மராட்டியத்திலே பவானியாகவும் வங்காளத்தில் துர்கையாகவும், தெற்கே குமரி முனையில் பகவதி அம்மனாகவும் வியாபித்து நம் பாரத பூமி மட்டுமல்ல உலக நாடுகளில் எல்லாம் வாழும் நம் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் திருவடி மலர் வணங்கி என் அணிந்துரையைத் தொடங்குகிறேன்.

இவ்வுலகம் மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் நால்வரை அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது. அவர்களுள் முதல் இருவரால் உலகத்தை நாம் கண்டோம். மூன்றாமவரான குருவால் இவ்வுலகம் நம்மைக் கண்டது. இம்மூவரையே நான் கண்கண்ட தெய்வங்களாக கருதி வழிபடுகின்றேன்.

இந்தியா ஒரு ஆன்மீக திருநாடு. ஆன்மீகத்தையும் அதன் இறையாண்மையையும் போற்றிப் பாதுகாக்கும் திருநாடு. ஆன்மீகம் அல்லது ஆன்மவியல் என்பது ஆன்மாவுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிக்கும். ஆன்மீகத்தினைப் பின்பற்றுதல் ஒரு பயனுள்ள செயற்பாடு ஆகும். இது மத நம்பிக்கை சூழ்நிலை உண்மை என்பவற்றுக்கு நெருக்கமான ஒரு கருத்தாகும். ஆன்மீக விடயங்கள் மனிதத்தின் அனைத்தும் கடந்த இயல்பையும் நோக்கத்தையும் குறிப்பாக இது மனிதர்களைப் பொருள் சார்ந்த உயிரியலோடு தொடர்புடைய ஒரு உயிரினமாக மட்டும் கருதாமல் பொருள் உலகையும், காலத்தையும் கடந்ததாகக் கருதப்படும் ஒன்றோடு தொடர்புப் பட்டவையாகவும் ஐம்புலன்கள் கடந்ததாகவும் கருதுகின்றன. ஆன்மீகம் என்பது உடல் ஆன்மா என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் குறிக்கும். எனவே மனம் கடந்த பெருநிலையை உணர்த்துவது ஆன்மீகம் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Reseatch Academy

தூய்மையான இறை நம்பிக்கைக் கொண்டவர்கள். நாம் சரியாக நடந்து கொண்டால் நமக்குரிய விளைவும் சரியானதாகவே இருக்கும் என்ற மனத்தெளிவு பெற்றவர்களாகவே இருப்பர். அவர்களுக்கு அதை மீறிய எந்தச் செயலும் தேவையற்றது.

இதனால் தான் வள்ளுவப் பெருந்தகையும்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

என உலகிற்கு உணர்த்தினார்.

இறைபணியில் ஈடுபட்டு மனம் லயித்துக் கொண்டிருக்கும் யான் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெரம்பூர் 64 தலைக்கட்டு களத்தூர் தஞ்சாச்சாரி உள்ளிட்ட விஸ்வகர்ம மஹாஜன சமூக நலச்சங்கத்தில் பொருளாளராகப் பணியாற்றி ஆண்டுதோறும் நம் விஸ்வகுல சமுதாய மாணவர்களை பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் விழாக்களை நடத்தி வருகின்றோம். மேலும், பெரம்பூர் முனுசாமி தெருவில் கோவில் கொண்டிருக்கும் தையல் நாயகி வைத்தீஸ்வரன் ஆலயத் திருப்பணிகளில் கடந்த ஐந்தாண்டுகளாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன்.

அன்னை காளிகாம்பாள் அருட்கடாக்ஷத்தால் அவளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியத்தை எனக்கு அளித்திருக்கிறாள். காளிகாம்பாள் கோவில் அறங்காவலராக என்னைப் பொறுப்பில் அமர்த்திய அத்துனை நல் உள்ளங்களுக்கும் நன்றிகள் பல.

இப்பிரபஞ்சத்தின் நாயகன் ஸ்ரீ விராட் விஸ்வ பிரம்மத்தின் பிள்ளைகளாகிய நாம் அன்னை காளிகாம்பாளின் அருளோடு இவ்வுலகம் தழைத்தோங்க பாடுபடுவோம் என்று சபதம் ஏற்போம்.

அன்னை ஸ்ரீ காளிகாம்பாளை எழுத்துருவிலும் சுவைக்க முடியும் என்று நிருபித்துக் காட்டி இத்தலவரலாற்றை தொகுத்து அளித்த மறைந்த முன்னாள் அறங்காவலர் திரு. கோ. கண்ணன் அவர்களுக்கு கோடான கோடி நன்றிகள்.

வாழ்க பாரதம்
வளர்க அன்னையின் புகழ்
வாழ்க வளமுடன்

பிரம்மஸ்ரீ. **J. ரமேஷ் ஆச்சாரி**
அறங்காவலர்
சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர்
தேவஸ்தானம், சென்னை – 1.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். – குறள்

கோவில் என்பது சமய உணர்வினால் மக்கள் கூடுகின்ற ஒரு வெற்றிடம் அன்று. அஃது ஒரு மிகப்பெரிய புகலிடம். மனிதன் தன்னை முழுதாக இறைவனிடம் ஒப்படைத்துக் கொண்டு அடைக்கலம் புகுந்து இறைவனாகிய ஒரு பெரும் தெய்வீக சக்தியைக் கலை வடிவமாகப் படைப்பதன் பெருவிளக்கமே கோயில்கள் எனலாம். காலம் கடந்து நிற்கும் ஓர் உயரிய வாழ்க்கையின் உன்னத அடையாளமாகக் கோவில்கள் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இனியும் அவ்வாறே எப்போதும் தொடர்ந்து இருந்து வரும் என்பது திண்ணம்.

கற்பனைக்கும் எட்டாத அருள்தரும் சிவசக்தித்தலம் ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோவில் அகில புவனங்களையும் படைத்தும், காத்தும் கரந்தும் விளையாடும் அந்த ஆதிபராசக்தியானவள் நாம் உணர்ந்து தெரிந்து கொள்ளும் வேடங்கள் அநேகம், அவற்றுள் ஒன்று தான் காளி. துஷ்டர்களை அழித்து பக்தர்களை காக்க அன்னை கொள்ளும் கோலமே காளி ரூபம். காலம் என்பதன் தெய்வீக ரூபமே அன்னை காளி. இந்த பூவுலகிலே பிறந்த எந்த உயிரும் வளர்ந்து பின் இறந்து மறுபடியும் பிறக்கும் என்பது நியதி. இவ்வாறு புதிதாய் தோற்றுவிக்க சக்தி வடிவம் கொள்பவள் அன்னையே ! கோரமும் இறைவன் செயலே என்பதை எடுத்துக் காட்டவே சௌந்தர்யமான அன்னை, சக்தி சொரூபமான காளி உருவம் கொள்கிறாள். அழிவில்லாமல் ஆக்கம் ஏது ?

இரவை அழித்து பகலையும் பகலை அழித்து இரவையும் உண்டு பண்ணுபவள் அன்னையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னை காளிகாம்பாள் நாம் விரும்பும் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றும் காமாட்சியாய், தீயவர்களை அழிக்கும் காளிகாம்பாளாய், உலகையாளும் தேவியாய் தன்னை வணங்குபவர்களின் துன்பம் நீக்கி இன்பம் அளிக்கும் கமடேஸ்வரி அன்னையாய் கொலு வீற்றிருக்கிறாள் அந்த பராசக்தி அவள் குங்குமம் பெற்றாலே நாம் முக்தி அடைவோம்.

எல்லோருடைய மனித வாழ்க்கையிலும் ஆன்மீகம் என்பது ஒரு முக்கியமானது. அவ்விஷயத்தில் மகாசக்தி ஸ்ரீ காளிகாம்பாளை அடியேனை அவளுக்கு மும்முறை காவலாக்கித் தொண்டுச் செய்யும் பாக்கியத்தை கொடுத்தருளினாள். நான் அதற்கு என்ன தவம் செய்தேனோ!

மனித வாழ்க்கையில் இன்பம், துன்பம் கலந்தே இருக்கும். இருந்தாலும் கருணைக்கடல் அன்னை ஸ்ரீ காளிகாம்பாளை நம்பிக்கையுடன் வழிபட்டால் துன்பத்தினை நீக்கி இன்பத்தினை வழங்கி வெற்றியையும் அளித்து வளமுடனும் நலமுடனும் புகழுடனும் நம்மை வாழ வைப்பாள். இது நான் கண்ட மகத்துவமாகும்.

ஆலயத் திருப்பணிக்காகத் தொண்டு செய்ய என்னைத் தேர்ந்தெடுத்த விஸ்வகர்மா உடன்பிறப்புகள் அத்துனைப் பேருக்கும் என் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரம்மஸ்ரீ. **R. சுப்ரமணி ஆச்சாரி**
அறங்காவலர்
சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர்
தேவஸ்தானம், சென்னை – 1.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். - குறள்

வாழ்த்துரை

'ஆண்டவன் பணியே அறப்பணி' அதற்கே 'உன்னை அர்ப்பணி' என்னும் கூற்றுக்கிணங்க இந்துமதம் மட்டுமல்லாது சமயங்கடந்த அறத்தைப் போற்றி பேணிக்காக்கும் சமூக ஆர்வலர்களாக விளங்கும் ஸ்ரீ காளிகாம்பாள் கோவில் தேவஸ்தான அறங்காவலர்கள் அனைவரும் இறைவன் திருப்பணியில் இதயம் நெகிழ்ந்து, மக்கள் பொதுப்பணியில் மனம் மகிழ்ந்து, மக்கட் சேவையே மகேசன் சேவை என்று தொண்டு செய்து பல்லாண்டு காலம் வாழவும் தங்கள் இறைப்பணித் தொடரவும் முன்னாள் அறங்காவலர் திருப்பணி கமிட்டி தலைவர் சிந்தாதரிப்பேட்டை திரு. ஆர். ஏழுமலை ஆச்சாரியார் அவர்களின் மருமகனாகிய T.J. இரகுபதி ஆச்சாரியார் ஆகிய நான் தாங்கள் பொறுப்பேற்றிருக்கும் இம்மகத்தான பணியில் வரலாறு படைத்து சாதனைப் புரிந்திட என் உளம் கனிந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
பிரம்மஸ்ரீ. **T.J. இரகுபதி ஆச்சாரி**
விஸ்வா அசோசியேட்
பதிவுபெற்ற அரசு ஒப்பந்ததாரர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மஸ்ரீ. புலவர். **ம.கோ. சீனிவாசன் ஆச்சாரி,** எம்.ஏ.,பி.எட்.,

முன்னாள் அறங்காவலர்



தொகுப்பாசிரியர் உரை

பாரத நாட்டில் தமிழ்நாடு கோயில்களுக்குப் பெயர் பெற்றது. இக்கோயில்கள் சிற்பம், இசை, கூத்து, ஓவியம், இலக்கியம் ஆகிய பல கலைகளுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. வாழ்வியலோடு சமய அறிவும், அதன் வழி ஒழுக்கமும் பின்னிக் கிடந்த நிலைமையத்தான் இது நமக்கு உணர்த்துகின்றது. இன்று அந்நிலை மாறி வருவது வருத்தத்தக்கது. மீண்டும் வாழ்வியலும், சமயநெறியும் ஒன்றுபட்டால் தான் மக்களினத்திற்கு உய்தி உண்டு என்பதை மேன்மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

நமது சமய சாத்திர தோத்திர நூல்கள் சிவாலயத்தைச் சிவமென வழிபடுகின்ற சரியையாளருக்கு இறைவன் வெளிப்படாமல் இருந்து அருள்புரிகிறாள். மந்திரம் ஓதி வழிபடுகின்ற கிரியையாளருக்கு விறகைக்கடைகின்றபோது தோன்றும் தீப்போல வெளிப்படுகின்றான். தமதுள்ளமே கோயிலாகக் கொண்டு வழிபடுகின்ற யோகியருக்கு கறந்தபோது தோன்றும் பால் போல் வெளிப்படுகின்றாள். எங்கும் இறைத்தன்மையைக் காணும் ஞானியர் கோயிலிலுள்ள உருவத்தைக்காணும் போது கன்றை நினைந்த மாத்திரத்திற் பசு பால் கறப்பதுபோல அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் அருளை வாரி வழங்குகிறாள்.

யாவருக்கும் காண்பரிய இறைவி உயிர்கள் மாட்டு வைத்த பெருங்கருணையால் திருமேனி கொண்டு நெய்தல் நிலக் காமாட்சியாக எழுந்தருளியுள்ளாள்.

ஆகனமாய் யாரும் அரிவரிது அப்பொருள்
சுகளமாய் வந்ததென்றுந் தீபா .... உய்ய வந்தார்.

அருளே உலகெல்லாம் அருள்விப் பதீசன்
அருளே பிறப்ப றுப்பாதனால் – அருளாலே
மெய்பொருளை நோக்கும் விதியுடையேன் – எஞ்ஞான்றும்
எப்பொருளுமாவ தெனக்கு.

என்று காரைக்காலம்மையார் அருளிச் செய்திருப்பதுபோல்,

என்னையோர் பொருளாகக் கொண்டே
எம்பிராட்டி அருள் செய்தாள்.

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தான அறங்காவலர் குழு பெருமக்கள் ஐவரும் அழைப்பித்து : அன்னையின் தல வரலாறு நூல் அமைத்துத் தருமாறு அன்பு வேண்டுகோள் விடுத்தனர். அடியேன் ஏற்றுக்கொண்டு எனக்கு ஸ்ரீகாளிகாம்பாள் உணர்த்திய வகையில் எழுதியுள்ளேன். நிறை – குறை எல்லாம் அவளுக்கே சமர்ப்பிக்கின்றேன்.

அன்பர்களும், அருளாளர்களும், அன்பு கனிந்த உள்ளத்தால் அடியேனை வாழ்த்தியருள்வீர் என்பதே திருவருட்பிரகாசம்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

		பக்கம்
1.	சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்	27
2.	பரிவார தேவதைகள்	34
3.	விஸ்வ பரப்பிரம்மத்தின் சிறப்பு	37
4.	ஸ்ரீ விராட் போத்தலூரி வீரப்பிரம்மேந்திர சுவாமிகள்	50
5.	கருணை கடாக்ஷி காளிகாம்பாள் !	61
6.	"சென்னை" பெயர் வரக் காரணம்	68
7.	கோட்டையில் குடியிருந்த கோமகள் தல வரலாறு	72
8.	திருக்கோயில் திருவிழாக்கள்	76
9.	திருக்கோயில் வாகனங்கள்	I
10.	பஞ்சலோக விக்ரஹங்கள்	IV
11.	சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் வெண்கலக் கிண்ணித் தேர் வரலாறு	VIII
12.	ஸ்ரீ சக்ர மஹா மேரு விளக்கம்	92
13.	சத்ரபதி சிவாஜி வணங்கிய சந்நிதானம்	93
14.	அன்னையை பாடிப் பரவிய அருளாளர்கள்	96
15.	அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் 108 போற்றி	124
16.	வருடாந்திர திருவிழாக்கள்	140
17.	அன்று முதல் இன்று வரை அறங்காவலர்கள்	159

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலவர்

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

ஸ்ரீ விஸ்வகர்மா

ஓம் ஈசான்யாய நம : ஓம் தத்புருஷாய நம :
ஓம் அகோராய நம : ஓம் வாமதேவாய நம :
ஓம் சத்யோஜாதாய நம :
ம் தேவ தேவ மகாதேவ விஸ்வகர்ம ஜெகத் குருவே நம :

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காயத்ரி

ஓம் பூர்: புவ: ஸுவ: தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ: யோந: ப்ரசோதயாத்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மணிவேல் சன்னதி

ஸ்ரீ வீராட் போத்தலூரி வீர பிரம்மேந்திர சுவாமிகள்
முதன்மை சீடர் சித்தையா சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளி ரதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடி மரம்



அறங்காவலர் குழுத் தலைவர்

பிரம்மஸ்ரீ. S. சர்வேஸ்வரன் ஆச்சாரி

அறங்காவலர்கள்

பிரம்மஸ்ரீ. K. யுவராஜ் ஆச்சாரி

பிரம்மஸ்ரீ. J. ரமேஷ் ஆச்சாரி

பிரம்மஸ்ரீ. EMS. மோகன் ஆச்சாரி

பிரம்மஸ்ரீ. R. சுப்ரமணி ஆச்சாரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

தமிழகத்தின் தலைநகராம் தருமமிகு சென்னையில் சென்னை வாழ் விஸ்வகர்ம சமுதாயத்தினரின் குலதெய்வமாய் மேற்படி சமுதாயத்தினரை அருள்பாலித்து, வாழ்வளிக்கவும் சென்னை வாழ் விஸ்வகர்ம சமுதாயத்தினரால் தோற்றுவித்து ஸ்தாபிக்கப்பட்டதும் அவர்கள் நிர்வாகத்தில் பரிபாலனத்தில் தொன்று தொட்டு இருந்து வருவதுமான (அன்னை ஸ்ரீ காமாட்சி) ஸ்ரீ காளிகாம்பாள் எனும் திருநாமம் கொண்டு சர்வ மங்களகாரிணியாகவும், சர்வ சௌபாக்யதாயிணியாகவும், ஸ்ரீ சக்ர சாம்ராஜ்ஜினியாய் மேற்கு திசை நோக்கி எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகிறாள்.

தொண்டை வளநாட்டில்

அருணாசலம் – திருவண்ணாமலை
தணிகாசலம் – திருத்தணிகை மலை
கடிகாசலம் – சோளிங்கர் மலை
வேங்கடாசலம் – திருவேங்கட மலை
பிரம்மாசலம் – திருக்காளத்தி மலை

ஐம்மலைகள் அரண்களாக விளங்கி வருகிறது. தலை நகரத்தின் தனிச்சிறப்பாகும்.

தமிழகத்தின் வங்கக் கடற்கரைப் பகுதியில், புகழ் ஆகிய கவசம் அணிந்து பல்வகை அறங்களாகிய படைக்கருவிகள் தாங்கி – வாய்மை, ஒழுக்கம், நோன்பு, பக்தி என்னும் நாற்பண்புகளையும் நால்வகைப் படைகளாகக் கொண்டு தீவினையாகிய பகைவர்களை அடக்கி வெற்றி கொண்டு பேரரசி அன்னை பராபட்டாரிகா ஸ்ரீ காளிகாம்பாள் அருள்பாலிக்கின்றாள்.

அவள் எழுந்தருளி அருளாட்சிபுரியும் தலம், சென்னை, அரண்மனைக்காரன் தெரு, மேற்கு வாயில் குடவாயில்.

தம்புச் செட்டித் தெரு கிழக்கு கோபுர வாயில் – குண வாயில்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் ! கோபுர தரிசனம் பாப விமோசனம் !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கோயில் அமைப்பும் சிறப்பும்

பாரிமுனை – உயர்நீதிமன்றத்திற்கு வட திசையும், இராயபுரம் இரயில்வே நிலையத்திற்கு தென் திசையிலும் சென்னை (பீச்) கடற்கரை இரயில் நிலையத்திற்கு மேற்கு திசையின், நடுவில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் உயர்ந்து நிமிர்ந்த கோபுர வாயில் பல சிற்ப வேலைப்பாடுகள் அமைந்து கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் அமைந்துள்ளது.

துவஜ ஸ்தம்பத்திற்கு கிழக்கேயுள்ள கர்ப்பக்ரஹத்தினுள் அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் அர்த்த பத்மாசனத்தில் பாச, அங்குசத்தைக் கையிலேந்தி, கமலத்தில் புன்னகை செய்கின்றாள். அம்பாளின் திருவடியில் பிருங்கி மகரிஷியின் கொள்ளு பேரனும் துவஷ்ட விஸ்வகர்மாவின் மகனுமான பிரம்மரிஷி ஸ்ரீ விஸ்வரூபனின் (திரிசிரன்) மூன்று தலைகள் செதுக்கப்பட்டுள்ளன. (ஆதாரம் : வியாச முனிவர் அருளிய ஸ்ரீமத் பாகவதம், துவைபாயன முனிவர் அருளிய ஸ்ரீதேவி பாகவதம், ஸ்ரீ நாராயண பட்டத்திரி அருளிய ஸ்ரீ நாராயணியம்)

ஸ்ரீ அம்பாள் மேற்கு நோக்கி அமர்ந்திருப்பது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும். அன்னையின் திருவடியில் ஸ்ரீ ஆதிசங்கரர் அவர்களால் நிறுவப்பட்ட அர்த்தமேரு அமைந்துள்ளது.

மூலவர் உட்பிரகாரத்திற்கு மேற்கில் உற்சவர் மண்டபம் அமைந்துள்ளது. ஸ்ரீ அம்பாள் பெரிய நாயகி (உற்சவர்) மகா தேஜசுடன் மகாலட்சுமியாகவும், மகா சரஸ்வதியாகவும் இரு பக்கங்களிலும் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றாள்.

''ஸசாமர ரமாவாணி ஸவ்யதக்ஷிண ஸேவிதா'' என்று ஸ்ரீலலிதா சஹஸ்ர நாமத்தில் கூறப்பட்டுள்ளது. லக்ஷ்மி தேவியும், சரஸ்வதி தேவியும் தன்னுடைய வலது இடது பக்கத்திலும் வெண்சாமரத்துடன் நின்று சேவிக்கப்படுபவள் என்பது இதன் கருத்து, அம்பாளின் முன்னிலையில் திருமகளும் கலைமகளும் பணிப்பெண்களாக இருந்து பணிபுரிகின்றனர்.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

உலக நடைமுறையில் செல்வமும், கல்வியும் சேர்ந்திருப்பதைக் காண்பதரிது. ஆனால், அம்பாளின் அருளுக்கு பாத்திரமாகின்றவர்களிடம் கல்வியும் செல்வமும் சேர்ந்தே அமையும் என்பது உறுதி.

பெரிய நாயகி உற்சவர் அம்பாளே கிண்ணித் தேரில் திருவீதி வலம் வருகிறாள். ஸ்ரீ அம்பாள் சிறிய நாயகி உற்சவர் பெரும்பாலும் கோயில் பிரகார மண்டபத்துக்குள்ளேயே பிரதக்ஷிணம் வருவதுண்டு. உற்சவர் மண்டபத்திற்கு கிழக்கில் சிற்ப வேலைப்பாடுகளுடன் கருங்கல்லிலான பதினாறு கால் மண்டபம் அழகுற அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில் எட்டு தூண்களில் அஷ்டாட்சரியை நினைவூட்டும் வகையில் சிற்சிறு வடிவங்களில் பாலகிருஷ்ணன், சிறிய திருவடி வழிபடும் பெண்தபசி, பெண் சேவார்த்திகள் சிற்பங்கள் அமைந்துள்ளன. காளிகாம்பாள் – பார்வதி, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரின் அம்சமாய் வீற்றிருக்கின்றாள்.

கி.பி. 1600 முதல் தொடங்கி விஸ்வகர்மா காலத்தோடு கற்பனை கடந்த கருவூலத்துப் பழம்பொருட்சொற்கலைமாச் செல்வர் தேடி வைத்த கடவுள் மணியும், தொடுக்கும் கடவுள் பழம் பாடல் தொடையின் பயனும், நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையும், புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமும் ஆகிய சென்னை காளிகாம்பாள் திருக்கோயிலில் இத்தகைய அற்புதச் சிற்ப வேலைப்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகும்.

சங்கக் காலத்தில் கோயில்களுக்கு நகர் என்னும் ஒரு பெயர் உண்டு. அம்முறையில் சென்னை காளிகாம்பாள் கோயில் தமிழகத் தலைநகராகத் திகழும் சென்னாபுரி என்பது சென்னை மாநகர் என்றே வழங்கி வருகின்றது. இக்கோயிலின் நுழைவு வாயில்கள் மிகுந்த வேலைப்பாடு கொண்டவைகளாக விளங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலத்தின் சிறப்பு

தொண்டை வளநாடு சான்றோருடைத்து என ஔவைப் பிராட்டியாரால் சிறப்பிக்கப்பட்ட தொண்டை மண்டலத்தில், காஞ்சி மாநகரத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீ காமாட்சி தனது இச்சா மந்திரத்தால் பன்னிரண்டு திருத்தலங்களில் காட்சி தந்து கருணை புரிகின்றாள். அவ்வண்ணம் அமர்ந்த திருத்தலங்களில் ஒன்றாக விளங்குவது ஸ்ரீ காளிகாம்பாள் அமர்ந்துள்ள பரதபுரி என்றழைக்கப்படும் இத்தலமாகும்.

முக்தி தரும் நகரங்களுள் முக்கியமாம் காஞ்சி நகர் என்ற திருத்தலத்துக்கு ஈசான்யப் பாரிசமாகவும், திருஞான சம்பந்தரால் பாடல்பெற்ற திருமயிலைக்கு வடக்குப் பாரிசமாகவும், மகத்துவம் மிகுந்த திருவொற்றியூருக்குத் தென் பாரிசமாகவும் பாலாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் எழுந்தருளியுள்ள திருவேற்காட்டிற்கு நேர் கிழக்காகவும் அமைந்துள்ளது இத்திவ்வியத் தலமாகும்.

இத்தலத்தைப்பற்றி, மச்ச புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், லிங்க புராணம் மற்றும் பவிஷ்ய புராணங்களில் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள காளிகாம்பாளை ரிஷிகளும், தேவர்களும் வணங்கியதாகப் புராணங்கள் சொல்கின்றன. வியாசர், பராசரர், அகத்தியர், ஆங்கிரசர் புலஸ்தியர் மற்றும் வருணன் முதலான முனி சிரேஷ்டர்களும் தேவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும், செல்வத்துக்கு அதிபதியான குபேரன் இத்தலம் வந்து ஸ்ரீ காளிகாம்பாளை வழிபட்ட பின்னர் தான் குன்றாத பெருஞ் செல்வங்களைப் பெற்றான் என்றும் புராணங்களில் சொல்லப்பட்டுள்ளன.

கோபுர வாயில் உள்ளே செல்லும் வாயிலில் வலப்பக்கம் நாக சுப்ரமணியர் இடப்பக்கம் பால கணபதி எழுந்தருளி வருக ! வருக ! என வரவேற்கின்றனர். அவர்களை வணங்கி வழிப்பட்டு உள்ளே சென்றால் 32 தூண்கள் அமைந்த தேவாசிரிய மண்டபம். அந்தத் தூண்களில் அழகு மிகுந்த அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் உருவங்கள்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருகிலுள்ள தேவாலயங்களை உணர்த்தும் காமாட்சி தவக்கோலம், கஜ சம்மாரமூர்த்தி நர்த்தன கோலம், பிருங்கி மகரிஷி, ஸ்ரீ ஆஞ்சநேயர், பாலகிருஷ்ணன் போன்ற சிலைகள் மிக மிக அற்புதமாக பொலிவுற்று காட்சித் தருகின்றன.

வெளிப்பிரகாரம் ஸ்தூல உடம்பு என்பர். உட் பிரகாரம் சூட்சும உடம்பு என்பர்.

இடமிருந்து வலம் வரும்போது

சிறிய நாயகி உற்சவ மூர்த்திகள் கலைமகள், மலைமகள் (காளிகாம்பாள்) திருமகள், மூவரும் நின்ற கோலத்தில் காட்சித் தந்து அருள்பாலிக்கின்றனர்.

அவர்களை வணங்கி சென்றால் நைருதி மூலையில் சித்தி விநாயகர் கம்பீரமான தோற்றத்துடன் அமர்ந்து அருள்பாலிக்கின்றார்.

யானை முகத்தான் பெருவிடையான் அழகார்
மான மணிவண்ணன் மருகன் – மேல் நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்
என் உள்ளக் கருத்தில் உளன்.

என்று வாழ்த்தி வணங்கி

கொடிக் கவி

இறைவன் எழுந்தருளி விளங்கும் திருக்கோயில்களின் அமைப்பு சரீரப் பிரஸ்தாரம் என்றும் இருதயப் பிரஸ்தாரம் என்றும் இரு வகைப்படும்.

சரீரப் பிரஸ்தாரமாவது, மனித உடலின் உறுப்புகளைப் போன்ற பகுப்புக்களுடன் கூடியது.

ஆலயங்களில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்பன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என ஆறு மண்டபங்களும் பெரும்பாலும் அமைந்திருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவைகள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும்.

மற்றொரு வகையில் நோக்கினால், கர்ப்பக் கிரகம் தலையும், அர்த்த மண்டபம் கழுத்தும், மகா மண்டபம் மார்பும் போல் விளங்குகின்றன. யாக சாலை நாபியாகவும், கோபுரம் பாதமாகவும் திகழ்கின்றது.

உடம்பிலுள்ள வாய், நாக்கு, அண்ணாக்கு, ஐம்பொறிகள், இருதயம் உயிர் என்பவனவற்றைப்போல் ஆலய அமைப்பிலும் பல பகுதிகள் உள்ளன.

அம்முறையில், ஆலயம் – உடல், கோபுரம் – வாய், நந்தி – நாக்கு, துவஜஸ்தம்பம் – அண்ணாக்கு, விளக்குகள் – ஐம்பொறிகள், கர்ப்பக் கிரகம் – இருதயம் இறைவன் (அ) இறைவி – உயிர் எனத் திகழ்கின்றன.

கொடிக் கம்பம்

கொடிக் கம்பம் என்பது ஆறு ஆதாரங்களையும் ஊடுருவிக் கொண்டு புருவ மத்தியில் சென்று முடியும் சுழு முனை நாடியையும், முதுகுத் தண்டையும் குறிப்பதாகும். மூலக் கனலை, முதுகுத் தண்டின் நடுவே அமைத்து அதனை ஊடுருவச் செல்லும் சுழு முனை நாடியின் வழியாக புருவ நடுவிற்கு நிலை பெறுவிக்கும் திறமே கொடியேற்றுதல் ஆகிய நிகழ்ச்சியாகும்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் – கொடிக் கவி என்பதும் ஒன்று. சிதம்பரத்தில் ஒரு சமயம் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களில் ஒருவராகிய ''உமாபதி சிவம்'' என்னும் சைவப் பெருஞ்சான்றோரை தில்லைவாழ் அந்தணர்கள் ஒரு சிறிது இகழ்ந்து, புறக்கணித்ததின் பயனாக கொடியேற்று விழாவில் எவ்வளவு முயன்றும் கொடி ஏறாமல், இறைவனின் திருவருட் குறிப்பால் தடைபட்டு நின்றது. அப்போது உமாபதி சிவாச்சாரியார் கொடிக் கவி என்னும் பெயரில் நான்கு பாடல்களைப் பாடியதும் திருவருள் துணையால் அக்கொடி ஏறிற்று என்பது வரலாறு.

In Public domain. Digitization by Muthulakshmi Research Academy

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே
இடம்; ஒன்று மேலிடல் ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள்
அடராது; உள் உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள
தேனும்; திரிமலத்தே
குளிக்கும் உயிர், அருள் கூடும்படி
கொடி கட்டினனே"

"ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களில் அழுந்தி வருந்திக் கிடக்கும் உயிர்கள், இறைவனின் திருவருளை எய்திக் கூடும்படி செய்வதன் பொருட்டு யான் இக்கொடியை ஏற்றிக் கட்டினேன்" என்பது இப்பாடலின் கருத்து.

கொடியை வணங்குவோம் ;
இந்தக் கொடியை வணங்குவோம் !
சிம்மக் கொடியை வணங்குவோம் !!

மேற்கு கோபுர வாயில் பலிபீடம் – வடக்கு நோக்கி அஷ்டாங்கமாக வணங்கி சேவிக்க வேண்டும்.

உள்ளம் கவர்ந்து ஓங்கும் (சினம்) கோபம், பேராசை, பொறாமை, கடுஞ்சொல் இன்னான்கில் ஒன்றாகிலும் பலிபீடத்தருகில் நின்று விட்டுவிட உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கொடி தோன்றும் தோரண வாயில் காப்பவர்கள் சண்டி – சாமுண்டி என்பர்களிடம் வணங்கி உள்ளே செல்ல அனுமதி பெற்று செல்ல வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. பரிவார தேவதைகள்

அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா உடனாய வடகதிர் காமனை வாழ்த்தி,

மூவிரு முகங்கள் போற்றி !
முகம்பொழிற் கருணை போற்றி !
யாவரும் துதிக்கின்ற
ஈராறு தோள் போற்றி !
காஞ்சி மாவடிவை தன்னுள்
செவ்வேள் மலரடி போற்றி !
அண்ணான் சேவலும் மயிலும் போற்றி !
திருக் கைவேல் போற்றி ! போற்றி !!

அருளும் பொருளும் வழங்கும் சித்தி – புத்தி விநாகயர் தென்திசை நோக்கி அமர்ந்துள்ளார்.

சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்கும் – கொத்தி
அரிமுகனைக் காய்ந்த அருணேசர் தந்த
கரிமுகனைத் கைத்தொழதக் கால்.

என்று வாழ்த்தி வணங்கி,

வீர பத்திரர்

ஆலமுண்ட நீலகண்ட நிமலன் நெற்றிக் கண்ணினின்று தோன்றியவர் வீரபத்திரர்.

அம்பிகை தன் கோபக் கனலில் இருந்து பத்ரகாளியைப் படைத்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைந்த வியுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ரொடிந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

இவர்கள் தட்சன் யாகத்தை தடை செய்யப் படைக்கப் பட்டவர்கள். வீரபத்திரரும் மூச்சுக் காற்றிலிருந்தும் வியர்வையிலிருந்தும் பலப்பல வீரர்களை யுண்டாக்கினார்.

பத்ரகாளியும் பல்லாயிரங் காளிகளைப் படைத்தாள்.

இருவரும் படைப்பு சக்திப் பெற்றவர்களாவர். வீரத்திலும் வலிமையிலும் மிக்கவர்கள்.

இறுதி செய்திடவே சீற்றம் இன்பமே யாண்மை என்னா
அறை சக்தி நான்காம் அரன்தனைக்கையை காளி
முறைதரு கவுரி இன்னோர் மும்மையும் பெற்றோர் ஏனைப்
பெறவருஞ் சத்தியான் இப்பெற்றியும் மறைகள் பேசும்.

– கச்சியப்ப சிவாச்சாரியார்

பத்ரக் காளி

சாக்த வழிபாட்டில் முதலில் உருவானவள் பத்ரக் காளி என்று கூறுவார்கள்.

காளி உபாசனைதான் அதிவிரைவில் சித்தியாகும்.

காளி தேவியே ஒளி இருள் ஆவாள்.

காளி தேவியே வளர்பிறை, தேய்பிறை ஆவாள்.

காளி தேவியே பஞ்சபூதத்தை இயக்கும் சக்தி ஆவாள்.

காளி தேவியே அனைத்தும் ஆவாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதை விளக்கும் வண்ணம் காளிகாம்பாள் கோயில் சைவம் - வைணவம் - சாக்தம் - கௌமாரம் - காணபத்யம் - சௌரம் ஆகிய ஆறு சமயங்களுக்கும் பொதுவில் இயங்குபவள் ஸ்ரீ காளிகாம்பாள் சன்னதியில் - சூரியன் - கணபதி - கந்தவேள் - ஆடவல்லான் - சிவன் (கமடம் - திருமால்) - சிவசக்தி - காளிகாம்பாள் அமர்ந்து, அவரவர் இறையவர் அவரவர் குறைவிலர் என்ற வகையில் சன்மார்க்கமாக அமைத்துள்ளனர் விஸ்வகர்மர்.

நாகேந்திரனை வணங்கி,

விஸ்வபிரம்மம் அனைத்து மதங்களுக்கும் பொதுவானவர். அனைத்து சக்திகளுக்கும் சிறப்பானவர்.

ஸ்ரீ பிரம்ம காயத்ரீ

ஓம் ஹ்ரீம் விஸ்வப்ரம்ம ஹம்ஸாய வித்மஹே
பரம ஹம்ஸாய தீமஹி
தன்னோ ஹம்ஸ பிரசோதயாத் (மூன்று முறை)

தினமும் பாராயணம் செய்ய வேண்டிய மந்திரங்கள்

ஓம் ஈசான்யாய நம :
ஓம் தத்புருஷாய நம :
ஓம் அகோராய நம :
ஓம் வாமதேவாய நம :
ஓம் சத்யோஜாதாய நம :

ஓம் தேவ தேவ மகாதேவ விஸ்வகர்ம ஜெகத் குருவே நம :

ஈசானம்	நடு முகம்	பளிங்கு நிறம்
தத்புருஷம்	கிழக்கு முகம்	குங்கும நிறம்
அகோரம்	தெற்கு முகம்	கரு நிறம்
வாமதேவம்	வடக்கு முகம்	குங்கும நிறம்
சத்யோஜாதம்	மேற்கு முகம்	வெண்ணிறம்

In Public domain Digitization: Muthulakshmi Research Academy

3. விஸ்வ பரப்பிரம்மத்தின் சிறப்பு

வலப்பக்கத்தில் சூலம், மழு, வாள், வச்சிரம் அக்னி.

இடப்பக்கத்தில் அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம்

சூலம் முக்குண வடிவும், மழு சக்தி வடிவும், வாள் பராக்கிரம வடிவும், வச்சிரம் போற்றுதற்கியலாத வடிவாகவும், அக்னி சங்கார வடிவாகவும், இவைகள் மகாமாயையயின் மேலிருக்கிற பதார்த்தங்களை வெளிப்படுத்துவதும் பாசங்களை நீக்கவும்.

அபயம்	எல்லா உலகங்களையும் காக்கும் சக்தியும்
பாசம்	மல மாய கன்ம வடிவும்
மணி	ஓசை வடிவும் மந்திரங்களை விளக்குவதும்
நாகம்	எவற்றையும் விதிக்கும் காம்பீரிய சக்தியும்
அங்குசம்	ஆன்மாவுக்கு போக்கியப் பிராப்திகளை நியமிப்பது மெனக் காமிகாகமம் கூறுகின்றது.

ஸ்ரீ விஸ்வப் பிரம்மத்தையும் ஸ்ரீ விஸ்வகர்மனையும் விஸ்வ காயத்ரி தேவியையும் வழிபடுவோம்.

ஸ்ரீ விஸ்வப் பிரம்மத்தை வணங்குபவர்கள் சுயநலம் இல்லாதவர்களாக இருப்பார்கள்.

ஸ்ரீ விஸ்வ காயத்ரி உபாசகர் – காமம் நுழைவதற்கு முன் – காயத்ரி நுழைந்தவர்கள் எந்த உயிரினங்களுக்கும் தீங்கு செய்ய மாட்டார்கள்.

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவும் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யானடி சென்னி சேர்த்துவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ பிரம்ம காயத்ரீ மந்திரம்

ஓம்
பூர் : புவ : ஸுவ :
தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ : யோந : ப்ரசோதயாத்.

ஸ்ரீ துர்க்கை வழிபாடு

து, உ, ரு, க, ஆ என்ற எழுத்துக்களின் கூட்டு உச்சரிப்பில்தான் துர்க்கா என்ற திருநாமம் வெளிப்படுகிறது. துர்க்கா என்னும் திருநாமம் அசுரர் – தடங்கல் – வியாதி – பாவம் மற்றும் பயத்தைப் போக்கிடும் சக்தி வாய்ந்த எழுத்துக் கோர்வையாகும்.

இராகு காலம் என்பதும், எம கண்டம் என்பதும் எந்தக் காரியமும் செய்யக் கூடாத நேரமென்றும், அந்த நேரங்களில் மேற்கொள்ளப்படும் காரியம் வெற்றி பெறாது என்றும் நம்மிடையே ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. எனவேதான், துர்க்கைக்கு இராகு கால பூஜை என்றதுமே பலருக்கு வியப்பாக இருக்கிறது. ஆனால், துர்க்கையைப் பூஜிக்க இராகு காலமே மிகச் சிறந்த நேரமென்பது சித்தர்கள் கண்ட வழி.

மாபெரும் பிரபஞ்ச சக்தியே துர்க்கை வடிவில் விளங்குகிறது. இராகு என்பதும், கேது என்பதும்கூட மிகச் சக்தி வாய்ந்த அம்சங்கள்தான். கிரகண காலங்களில் சூரியனையும், சந்திரனையும் இவை பிடிப்பதை அறிவோம். அதற்கான பரிகாரங்களையும் நாம் செய்து வருகிறோம். இவ்வாறு கிரகண சமயங்களில் மட்டுமின்றி, ஒவ்வொரு கிழமையும், அந்தக் கிழமைக்குரிய கிரகத்தைக் குறிப்பிட்ட சில காலம் இராகுவும், கேதுவும் பிடிக்கின்றன. இப்படிப் பிடிக்கும் காலங்களே தினந்தோறும் இராகு காலம் என்றும் எம கண்டம் என்றும் நிர்ணயிக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்தி வாய்ந்த இராகு, மகா சக்தியான துர்க்கையைப் பூஜித்து பலன் அடைந்ததாக நமது புராணங்களில் சான்றுள்ளது. எனவே, இராகு காலத்தில் நாமும் துர்க்கையை வழிபட அதற்குக் கைமேல் பலன் கிட்டும்.

சக்தியில் நல்ல சக்தி, தீய சக்தி என்ற பேதம் இல்லை. எப்படி பயன்படுத்தப்படுகிறதோ, அதைப் பொறுத்தே சக்தியானது நல்ல சக்தியாகவோ, தீய சக்தியாகவோ பரிணமிக்கிறது. ஆகவே தான், ஒவ்வொரு நாளும் மகா சக்தியான துர்க்கையை, அந்த நாளுக்குரிய கிரகத்தை இராகு பீடிக்கும் நேரமான இராகு காலத்தில் பூஜை செய்வோமானால் – அந்தப் பூஜைக்கு – மற்ற நேரங்களில் செய்யப்படும் பூஜையை விட, அதிக அளவு செயல் வேகம் இருக்கும்.

மற்ற நாட்களைவிட, செவ்வாய்கிழமை இராகு காலத்தில் செய்யப்படும் துர்க்கை பூஜைக்கு உடனடிப் பலன் கிடைப்பதை சித்தர்களும் உபாசர்களும் அனுபவப்பூர்வமாக கண்டறிந்து உள்ளனர். ஏனெனில், செவ்வாய்கிழமைக்குரிய அங்காரகன், துர்க்கையை மங்கள சண்டிகையாக வழிபட்டு பலனடைந்தவனாவான்.

செவ்வாய்கிழமைக்கு மங்கள வாரம் என்பது ஒரு பெயராகும். மங்களரமான மங்கள வாரத்தில் மஞ்சள் நிறப்பூக்களான தங்க அரளி, சாமந்தி, நந்தியாவட்டை ஆகிய மலர்களை அர்ச்சனைக்கும், மஞ்சள் நிற வாழைப்பழம், பலாச்சுளை, மாம்பழம், மஞ்சள் வண்ண வெண் பொங்கல் எலுமிச்சைச் சாதம் ஆகியவற்றை நிவேதனத்துக்கும் பயன்படுத்தி துர்க்கையை பூஜிக்க வேண்டும். பூஜையின்போது சொல்வதற்கு ஸ்ரீ "துர்க்கா சந்திர கலா ஸ்துதி" என்ற தோத்திரமாலை அனைவருக்கும் உதவக் கூடியது. தமிழில் துர்க்காஷ்டகம், இராகு கால துர்க்காஷ்டகம், துக்க நிவாரண அஷ்டகம், ரோக நிவாரண அஷ்டகம் ஆகியவை ஏற்றவையாக இருக்கும். தீபத்திலோ, கடத்திலோ, சித்திரத்திலோ, யந்திரத்திலோ அல்லது இதயத்திலோ துர்க்கையை வைத்துப் பூஜிக்கலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவக்கிரகங்களில் மிக வலிமை பொருந்திய இராகு பகவான், மங்கள வார இராகு காலத்தில் துர்க்கையைப் பூஜித்து, மகிழ்ச்சியான முகத்துடனும், நிறைந்த மனத்துடனும் விளங்குவதால்தான், மங்கள வார இராகு காலத்தில் துர்க்கையைப் பூஜை செய்ய வேண்டுமென்று சித்தர்கள் சொல்கிறார்கள். குறிப்பாக, இராகு காலப் பிரீத்தி, செவ்வாய் தோஷ நிவர்த்தி, விவாகப் பிராப்தி, பீடைகள் விலகுதல், பகைகள் நீங்குதல், காரிய சித்தி ஆகிய நோக்கங்களுக்காக இப்பூஜை மேற் கொள்வது நல்லது.

இராகு காலத்தில் திருக்கோயில்களுக்குச் சென்று அங்குள்ள துர்க்காதேவியை வழிபடுவது சிறப்பு. நல்ல மஞ்சள் நிறத்துடன் கூடிய எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி இரு கிண்ணங்களாகவும் எதிர்ப்புறம் மடக்கிக் குழியாக்கி அவற்றைத் திரி விளக்குகளாகப் பயன்படுத்த வேண்டும். சுத்தமான நல்லெண்ணெய், நெய், தேங்காயெண்ணெய் ஆகியவற்றைத்தான் தீபத்திற்குப் பயன்படுத்த வேண்டும் ஆயுள் பலத்துக்காகச் செய்யப்படும் பூஜையின் போது வேண்டுமானால் இலுப்பையெண்ணையைப் பயன்படுத்தலாம்.

இராகு காலத்தில் துர்க்கை சந்நிதியில் சுவாசினியை (முதிய சுமங்கலி பெண்களை) நமஸ்கரிக்கின்றவர்கள், எல்லா நலன்களையும் பெறுவார்கள். அங்கு சுவாசினிகளுக்கு தாம்பூலமும், தட்சிணையும் வழங்குகிறவர்கள் துர்க்கையின் அருளுக்குப் பாத்திரமாவார்கள். துர்க்கை சந்நிதியில் கன்னிப் பெண்களுக்குக் கால்களில் நலங்கிட்டு, கைகளில் வளையலிட்டு, பூச்சூட்டி, புத்தாடை வழங்கிப் பூஜிப்பவர்கள் மற்றவர்களால் பூஜிக்கத் தகுந்த வாழ்க்கையை அடைவார்கள்.

அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையும்
கன்னியென மறைபேசும் ஆனந்தரூப மயிலே
இறுகிய சிறுபிளை யெயிறுடையமபடர் எனதுயிர் கொளவரின்
யானேங்குதல் கண்டெதிர் தானேன்று கொளுங் குயிலே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தில்லை அம்பலவாணர் (நடராஜர் சன்னிதி)

விராட்விஸ்வ பரம்பிரம்ம கோயில் விஸ்வகாயத்திரி கோயில் அமைந்துள்ளது. ஆலய அலுவலகம் நிறுவப்பட உள்ளது. அறங்காவலர் அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. அடுத்து, நடராஜர் சன்னதியில் ஆண்டுதோறும் நடராஜர் அபிஷேகம் திருவாதிரை உற்சவம் - மாணிக்கவாசகர் விழா சிறப்பு சொற்பொழிவுடன் திருவாசகம் ஓதப் பெற்று நடைபெற்று வருகிறது.

உலகெலாம் உணர்ந்தோ தர்க்கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் ஜோதியன் அம்பலத்தாடுவான்
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்று பாடி,

சிவகாமியம்மை

ஒருவல்லி யல்லிக் கமலத்து
நூறு பைந் தேறலொத்த
திருவல்லி தில்லைச் சிவகாமி
வல்லி யென் சித்தத்துள்ளே
வருவல்லி செம்பொன் வடமேரு
வில்லியை வாட்கணம்பாற்
பொருவல்லி பூத்தலி னன்றேயிப்
பூமியைப் பூ வென்பதே.

பூத்தது மீரேழ் புவனமே யப்புவனம்
காத்தது வு மம்மை கருணையே - கூத்தரவர்
பாடுகின்ற வேதமே பாராவிப் பாரொடுங்க
ஆடுகின்ற வேதமே யங்கு.

என்று தில்லைவாழ் கூத்தனையும், சிவகாமி அம்மையையும் வழிபட்டு பிருங்கி முனிவரைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிருங்கி முனிவர்

பிரம்மாதி தேவர்களும் பிறரும் கண்டு நடுங்கும்படியான தவ வலிமை கொண்டவர், சிவபெருமானிடமிருந்து சிறப்பான பல வரங்களைப் பெற்றவர் பிருங்கி என்ற மாமுனிவர். நாள்தோறும் வேளை தவறாமல் சிவ பூஜை செய்வதோடு, கயிலை நாதனை அங்கு சென்றும் தரிசித்து விட்டு வரக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார் என்றால் அவருடைய தவ வலிமையை உணர்ந்து கொள்ள வேண்டும். நாள் தவறாது வந்து சிவனை மட்டும் வணங்கிவிட்டுச் செல்லும் பிருங்கி முனிவரின் போக்கைக் கண்ட மகாதேவி, மகா தேவனிடம் சென்று பணிந்து, பிராண நாதா ! என்னிறைவா !! சற்று முன் வந்து தங்களை மட்டும் சுற்றி வந்து வணங்கி விட்டு செல்கிறாரே பிருங்கி முனிவர், அவருக்கு நான் உங்களருகில் இருப்பது தெரியவில்லையா ? அல்லது என்னை வணங்குவதில் அர்த்தமில்லையென்று செல்கிறாரா ? ஒன்றும் புரியவில்லையே சுவாமி ! நான் தங்களில் சரி பாதியை பெற்றவள் என்பதை அவர் அறிந்திருக்கவில்லையா ? என்று கேட்டதும், சிவபெருமான் புன்னகைத்தவாறே பதிலுரைக்கிறார். தேவி ! என்னில் சரி பாதி சக்தி உன்னுடையதே என்றாலும் அவன் என்னை வணங்குவதிலேயே ஆனந்தம் காண்கிறான் போலிருக்கிறது. என்னை வணங்கினாலே உன்னை வணங்கியதாகத்தானே பொருள், இதனை நீ உணரவில்லையா சக்தி ! என்றதும், அதற்கு தேவி என்ன இருந்தாலும் சரி பாதி சக்தி எனக்கிருக்கிறது என்பதை அம்முனிவர் உணராமல் அவ்விதம் செய்கிறார் என நினைக்கிறேன். இதை அவருக்கு உணர்த்த வேண்டுமென நான் விரும்புகிறேன். அதற்கு நீங்களும் என்னுடன் உடன்பட வேண்டும் என்ற கேட்டதற்கிணங்க சிவபெருமான் சரியென்று ஒப்புக் கொண்டார்.

மறுநாள் வழக்கம்போல், பிருங்கி முனிவர் சிவபெருமானை தரிசிக்க கயிலைக்குள் நுழைந்தார். என்றுமில்லாதபடி சிவபெருமான் தனித்திருக்கவில்லை. மாறாக சிவ – சக்தி ரூபமாக (சரி பாதி சிவன் ; சரி பாதி உமை) அமர்ந்திருப்பதைக் கண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவ்விதம் சிவனைப் பணிவது என்று யோசித்தவர், சட்டென்று தன்னுருவை ஒரு வண்டாக மாற்றிக் கொண்டு விர்ரென்று பறந்து, சிவபெருமானது பக்கமாகச் சென்று சுற்றி, பின் பகுதியில் சக்தியுடன் சேர்ந்திருக்கும் பாகத்திற்குள் குடைந்து சென்று வெளி வந்தார். இவ்விதமாகவே மும்முறையும் சிவபெருமானையே வலம் வந்தார்.

அதைக் கண்ட தேவி மிகுந்த கோபங் கொண்டு, சிவத்திற்கே சரிபாதி சக்தியைத் தரும் என்னை மதிக்காமல் சிவனை மட்டும் வலம் வந்து துதிக்கும் உமக்கு உடம்பில் சக்தியேதும் இல்லாது போகக் கடவது என்று சாபமிட்டாள்.

சக்தியிழந்த பிருங்கி முனிவர், முன்பிருந்த உடல் மாறி, வலி குன்றி ஜடம்போல் காட்சியளித்தார். அவரது நிலையைக் கண்டு இரங்கிய மகாதேவர், சக்தியிடம் கூறி அவரை மன்னித்து, அருள் புரியுமாறு கூறினார். மனமிரங்கிய தேவியும் அந்நிலை மாறுமாறு அருள்புரிந்தாள். அதன்பின் முன்போல் சுய உருவம் பெற்ற பிருங்கி முனிவர், இருவரையும் பணிந்ததோடு, தமது அறியாமையை பொறுத்தாட்கொள்ளுமாறு வேண்டினார். உலக இயக்கமே சிவசக்தியின் இயல்பாகவே இயங்குகிறது என்பதையும் பிருங்கிக்கு உணர்த்தியருளினார்.

இக்கருத்தை விளக்கும் சங்கக் காலப் பாடல் புறநானூற்றிலும் ஐங்குறு நூறிலும் காணப்படுகிறது.

பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று ; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் காக்கினும் காக்கும்.
என்றும்
நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன். இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்ந்தன முறையே.

என்றபடியும் விளக்குவது ஈருருவான ஓர் இறையை நாம் வணங்கத் தூண்டுகிறது.

மூலையில் பழமையான முரசு இருந்தது தற்காலத்தில்
பழுதாகிவிட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முரசு

பாரதத்தின் முப்பெரும் பட்டினங்களும் ஸ்ரீ தேவியின் பெயர்களைத் தாங்கியுள்ளன. சென்னைப் பட்டினத்தில் சென்னம்மாளாகவும், பம்பாயில் மும்பா தேவியாகவும், கல்கத்தாவில் காளிகா க்ஷேத்திரமாகவும், காளிகாதேவி எழிலாகக் கோயில் கொண்டிலங்குகிறாள். இந்த மூன்று நகரங்களும் பழமை வாய்ந்தது. பெருமையுற்று விளங்குகிறது. இவை வரலாற்றுண்மையாகும்.

சென்னை – மீன் பிடிக்கும் தொழிலுக்குப் பெயர் போனது சென்னைக் குப்பம்.

மீன் பிடிக்க ஆங்கிலேயர் பயன்படுத்திய வலை சென்னை வலை என்றும் பேரிச் செட்டிமார் பேரிகைக் கொட்டி வாணியப் பொருளை விற்ற டமாரம் சென்னை காளிகாம்பாள் கோயில் மூலையில் வைக்கப்பட்டு இருந்தது. அதற்கு முரசு என்றும் வயர் உண்டு. இவற்றை சர்வகலா சாலை வெளியிட்ட தமிழ் அகராதி கூறுகிறது (எலக்சிகன்) சரித்திர காலத்திற்கு முன்பே தோன்றியது சென்னைக் காளிகாம்பாள் கோயில்.

ஸ்ரீ ஆஞ்சநேயர்

ஆஞ்சநேயருடைய சிறப்புகளாகச் சொல்லப்படுபவை அவருடைய பலம் ; அதாவது சரீர பலம் வீரபராக்கிரமம், துணிச்சல், காரிய சாமர்த்தியம், அபாரமான புத்தி, இலக்கணத்தின் பேராற்றல். அப்பழுக்குச் சொல்ல முடியாத பிரம்மச்சர்யம். தன்னுடைய இத்தனை சக்திகளையும் தனக்காக இல்லாமல் பகவத் பிரீதியாக தர்மத்திற்கே பிரயோஜனப்படுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக இராம பக்தியில் அப்படியே உருகி இராமருடைய அடியார்க்கடியாராக அடங்கிக் கிடந்த தன்மை ஆகியவைதான். சரீர பலம், காரிய சாமர்த்தியம், செய்கிற செயலிலேயே ஆடாத அசையாத ஈடுபாடு ஆகியவற்றால் அவர் கர்மயோகியாகவும், அசஞ்சலமான இராம பக்தியால் பக்தயோக சிகாமணியாகவும் தான் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

Public Domain Digitization Muthulakshmi Research Academy

ஞான யோகியாக அவரை நம்மில் பல பேர் தெரிந்து கொள்ளவில்லை. ஆஞ்சநேயருக்கு பால்ய வயதில் அவருடைய அபர வித்யைக்கு ஆசார்யராக சூரிய பகவான் வந்தார் என்றால், வயது முதிர்ந்த காலத்தில் அவருடைய பர வித்யைக்கு ஆசார்யராக சூரிய குல திலகரான இராமர் வந்தார். அந்த இராமர்தான் தன் மூலமான (மகா விஷ்ணு) ரூபத்தில் சூரியனுக்கும் பரவித்யை உபதேசிக்கிறார். எப்படி வாழ வேண்டுமென்று நமக்கெல்லாம் வழிகாட்டுபவர் ஸ்ரீ ஆஞ்சநேயர். அவரை வணங்கி குருவருள் பெறுவோமாக.

இராமாயணத்தில் இராமருக்கு இராம தூதர். பாரதத்தில் பார்த்தன் தேர்க் கொடியில் அமர்ந்து வெற்றிக் கொடி நாட்டியவர்.

கலியுகத்தில் கலி தீர்க்கும் கவியரசு. (கவி – அனுமன்)

யானைத்தோல் போர்த்த கஜசம்மாரர் மூர்த்திகள். கம்பை நதியில் ஏகம்பனை தழுவிக் கொள்ளும் காமாட்சி வடிவம். தேவாசிரிய மண்டபத்தில் காணலாம்.

அம்பாள் சந்நிதி சுற்றுச் சுவர்களில் ஐந்து கன்னியர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. கோஷ்ட தேவதைகளாக அம்மன் வடிவத்திலேயே அமர்ந்த கோலத்தில் உள்ளனர்.

உட்பிரகாரம் (ஸ்தூல - சூட்சும உடம்பு)

பெரிய நாயகி – கலைமகள் திருமகளுடன் கிழக்கு திருமுக மண்டலம் அலங்கார மண்டபம் பிரம்ம உற்சவத்தில் வீதியுலா சென்று அருள்புரியவள்.

தெற்கு நுழை வாயில் வழியாக உட்பிரகாரம் சென்று இடது பக்கமாக வலம் வந்தால் நைருதியில் உண்ணாமுலை உடனுறை அண்ணாமலையாரை தரிசிக்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழுவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே.

என்று வாழ்த்தி வணங்கி,

ஸ்ரீ காளிகாம்பாள் சந்நிதி கருவறையின் முன்பு 12 கால் மண்டபம் அமைந்துள்ளது. விமானம் மேற்கட்டியில் பாம்பு சூரிய சந்திரனைப் பற்றுவதுபோல் அமைத்துள்ளனர். மீன்கள் சிறிதும் பெரியதும் உலாவுவது போன்ற கடற்காட்சியை அமைத்துள்ளார்கள். வாஸ்து முறைப்படி அமைந்த திருக்கோயிலாக அமைந்துள்ளது காளிகாம்பாள் திருக்கோயில்.

நாக தேவதைகள்

பிரம்மாவின் மானஸ புத்திரரான காஷ்யப மகரிஷிக்கு ஓர் விருப்பம் தோன்றியது. தமக்கு குழந்தைப்பேறு வாய்க்க வேண்டும் என்பதுதான்.

தமக்கு வாய்த்த விருப்பத்தை ஈடேற்றிக் கொள்ள வேண்டி மகரிஷி தற்காலத்தில் மானஸரோவர் என்ற அழைக்கப்படும் சுந்தரவனம் பகுதிக்குச் சென்று சிவத்தை வேண்டி தவத்தைப் புரிந்தார்.

காஷ்யபரின் தவம் கண்டு சிவபெருமான் முனிவர் மனதிலிருந்து ஒரு பெண் குழந்தை தோன்ற அருள்புரிந்தார். அங்ஙனமே மனதிலிருந்து மிகுந்த அழகும் பிரகாசமும் கொண்டவளாக ஒரு பெண் தோன்றினாள். அவள் மானஸாதேவி என்று பெயர் கொண்டு வளர்ந்தாள்.

பருவம் அடைந்ததும் அவளை ஜரத் காரூர் என்ற மகரிஷிக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

In Public domain. Digitization: Muthu Lakshmi Research Academy

அவர்கள் இருவருக்கும் ஆயிரக்கணக்கில் ஸர்ப்பக் குழந்தைகள் பிறந்தன. அதில் ஆஸ்திகள் என்ற நாகத்தை மட்டும் தனது பாதுகாப்பில் வைத்துக் கொண்டு மற்றவைகளை பகல் எல்லாம் பூமிக்கடியில் வாழவும் இரவுகளில் பூமியின் மேல் சஞ்சாரம் செய்து இரை தேடிக் கொள்ளவும் அனுமதித்தார்.

சிறிது காலத்திற்குப் பின் மானஸாதேவி சிவபெருமாளின் அருளால் மானஸரோவர் பகுதியில் உயர்ந்த இடத்தில் நாகதேவியாக உருக்கொண்டு அமர்ந்தாள்.

இந்த நாகதேவி வழிபாடு கடுமையான பல தோஷங்களைப் போக்கவல்லது. எனவே நாமும் நாகதேவியை வழிபடலாம்.

நவகிரகங்கள்

சூரியன்

எங்கும் இருளகற்றி எழுபரித் தேர்ஏறித்
துங்கமுடன் சுற்றிவரும் சோதிமணிச் சூரியனே !
துன்ப இருளகற்றி தூய நலந்திகழ
இன்பம் தருவாய் எனக்கு.

சந்திரன்

தாரணியில் வாழ்வோர்க்கு தண்நிலவைத் தந்துதவி
நீரணிந்தோன் நெற்றியிலே நின்றிலிங்கும் வெண்ணிலவே !
என்றன் துயர்நீக்கி இன்பம் பலவாக்கி
நன்றே புரிவாய் நயந்து.

செவ்வாய்

தீரம் மிகக்கொண்ட செவ்வாய் பகவானே !
ஈரம் கசிய இணையடியை யான்துதிப்பேன்
துன்பம் துடைத்தென்னைத் தூய நெறிப்படுத்தி
இன்பம் தருவாய் இனி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புதன்

வித்தைக் களஞ்சியமே வெற்றிமிகு நாயகமே !
புத்திக்கு வித்தே புதனே உனைத்துதிப்பேன்
சித்தம் மகிழ்ந்து சிறியேன் நலமடைய
நித்தம் அருள்வாய் நினைந்து.

குரு

தேவரெல்லாம் போற்றத் திகழ்கின்ற நற்குருவே !
நாவாரப் பாடி நயந்துருகிப் போற்றுகின்ற
சேயாம் எனக்குத் திருவருளைச் செய்கின்ற
தூய குருவே துணை.

சுக்கிரன்

மன்னுகலை நாயகனே மாண்புதரும் சுக்கிரனே
சென்னி வணங்கித் தினமும் துதிசெய்வேன் !
பொன்னும் கலையும் புகழும் பொருந்திடவே
உன்னருளைச் செய்வாய் உவந்து.

சனி

ஒன்பான் கிரகத்துள் ஒன்றாய் மிளிர்கின்ற
அன்பாய் நலம்புரியும் அண்ணல் சனீஸ்வரனே !
என்பால் அடைந்தாலும் ஏழைக் கிரங்கியினி
நன்மையே செய்வாய் நயந்து.

இராகு

இன்பமே செய்யும் இராகு பகவானே !
அன்பாக உன்றன் அடிபணிவேன் எம்குடும்பம்
செல்வ வளமுடனே சீரோங்கி வாழ்வதற்கு
நல்லருளைச் செய்வாய் நயந்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேது

சீர்மேவும் கேதரசே செல்வச் செழிப்புடனே
பார்புகழும் வாழ்வும் பலவளமும் பெற்றினிது
எங்கள் குடிதழைக்க என்றென்றும் உன்றனது
தூங்கமிகு பாதம் துணை !

நாள்தோறும் இப்பாடல்களைப் பாடித் துதித்தால், நவக்கிரக தோஷங்கள் நீங்கிப் பல நன்மைகள் பெறலாம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பு மிரண்டு உடனே
ஆசறு நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.
எனப் பாடி,

வாயு திசையில் வள்ளி தேவ சேனாவுடன் அருள்புரியும் வள்ளி மணாளனை வாழ்த்தி,

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவர் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

என்று வாழ்த்தி வணங்கி,

சப்த மாதாக்கள்

1.	பிரம்மி	பிரம்மனின் சக்தி
2.	வைஷ்ணவி	விஷ்ணுவின் சக்தி
3.	மகேஸ்வரி	மகேஸ்வரனின் சக்தி
4.	கௌமாரி	குமாரனின் சக்தி
5.	வாராஹி	வராஹ மூர்த்தியின் சக்தி
6.	நரசிம்ஹி	நரசிம்ஹனின் சக்தி
7.	இந்திராணி	இந்திரனின் சக்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



4. ஸ்ரீ விராட் போத்தலூரி வீரப்பிரம்மேந்திர சுவாமிகள்

கி.பி. 1604 ம் ஆண்டு விஜய நகர சாம்ராஜ்யத்திற்குப் பின் ஆந்திரப் பிரதேசத்தில் பிரம்மஸ்ரீ பரிபூரணாச்சாரியாரின் பிரக்குராம்பா தம்பதியர்கள் செய்த தவப் பயனால் ஈன்றெடுத்த தவப் புதல்வர் ஸ்ரீ வீரப்பிரம்மேந்திரர்.

கர்நாடக மாநிலத்தில் நந்தி கொண்டா என்ற கிராமத்தில் ஸ்ரீவீரபோஜாச்சாரியார் வீரபாப்பம்மாள் தம்பதியரால் வளர்க்கப்பட்டவர். ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்தவர். இளமையிலேயே ஞானம் கைவரப் பெற்று பஞ்சகர்மாக்களை உபதேசம் செய்தார்.

1. மாதா – பிதா மனம் நோகாது அவர்கள் வாழும்வரை பேணி பாதுகாத்து அவர்களுக்கும் இவ்வையகத்திற்கும் புகழ் சேர்ப்பது.
2. இறை வழிபாடு – தெய்வ சிந்தனையின் காரணத்தால் பாப காரியங்களினின்றும் விடுபட்டு அன்பும் அறமும் அருளோடு பெற்று வாழ்வது.
3. பிற உயிர்களை கொல்லாமல் (ஜீவ ஹிம்சை) கொல்லாமையை கடைப்பிடிப்பது.
4. பித்ரு கடன். இறைவனடி சேர்ந்த முன்னோர்களை நினைவு கூர்ந்து வழிபடல்.
5. பசித்தவர்க்கு பசி நீக்குதல் அன்னம் பாலிப்பு.

இவ்வைந்தும் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை வருகை

1629ம் ஆண்டில் சென்னை மாநகரம் வந்தார். சென்னை மாநகரில் சூளை அவதான பாப்பையர் வீதியில் தங்கிருந்த வீரசுப்பையா சுவாமிகள் தன் தத்துவ யோக விளக்கத்தால் மக்களைக் கவர்ந்தார். கந்தசாமி பிள்ளை, சிவப்பிரகாசம் பிள்ளை இருவரும் சுவாமிகளிடம் அருட்தீட்சைப் பெற்று வீர கந்தையா என்றும் வீர சுப்பையா என்றும் குருவின் பெயரை தம் பெயரோடு இணைத்துக் கொண்டனர்.

சூளைப் பகுதியில் ஒரு மடம் வீர சுப்பையா மடமும், வியாசர்பாடியில் வீரகரப்பாத்திர வீரய்யா சுவாமிகளும் சமாதி அடைந்துள்ளனர். இன்றும் அம்மடங்கள் உள்ளன.

ஸ்ரீவிராட் போத்தலூரி வீரப்பிரம்மேந்திரர் சுவாமிகள் அருளிய காலக்ஞான நூல் உலகம் வாழ வழிகாட்டியாக உள்ளது. ஜீவன் முக்தராக இன்றும் நம் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் சுவாமிகள்.

"விராட் பதவிக்யாதம் சித்தானந்த ப்ரதாயகம்
காலக்ஞான ப்ரவக்தாரம் வீரப்பிரம்மம் குரும் பஜே"

இவ்வையகத்து ஆதி குருவாகவும் பெரும்புகழ் வாய்ந்தவரும் சித்த ஞானிகளுக்கு ஆனந்தமதை அளித்தவரும், காலக்ஞானத்தை அருளியவருமான குரு ஸ்ரீ வீரப்பிரம்மம் அவர்களுக்கு அடியோங்கள் வணக்கம்.

குரு வாழ்க ! குருவே சரணம் !!

என்னை ஒருபொருளாகத் திருவுளத்தில்
அடைத்தாய்க்கிங்கு ஏதுகைம்மாறு
மின்னணையை வருமாட்டி சடாமகுடி
கண்களிக்க வரும் வீரப்பிரம்மமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்னை மறவாதுன்னா துறுவேனை
உன்னடியானென்ன வைத்தாய்
பொன்னைனய திருத்தாளா புவியில் வாழ்
வீரபிரம்மங்கார குருவே !

பள்ளியறை நாயகி

இல்லாதான் வள்ளலாய் உள்ளானை
இரவாமுன் ஈதல் போலும்
நல்லாளே உனதுபதம் விரும்பாதேன்
ஆயிடினும் நல்க வேண்டும்
கல்லாத புல்லியர்போல் தேகபோகம்
விரும்பிக் கலங்கா நின்ற
பொல்லாதேன் பிழைபொறுக்கும்
காளிகாம்பாள் அம்மை உமையே.

திருநந்தி தேவர்

ஐயிரு புராண நூல் மலற்கோதியுஞ்
செய்ய பன்மறை களுந் தெரிந்து மாயையால்
மெய்யறு சூள்புகல் வியாதனிட்டியே
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவோம்.

கமடேஸ்வரர் சந்நிதி

தேவாசுரர் பாற்கடலை கடைந்தபோது மந்திர மலை பாரம் அதிகமாகிக் கடலுக்குள் செல்ல ஆரம்பித்தது. கடலுக்குள் மலை செல்லாதவண்ணம் திருமால் ஆமையுருவெடுத்து மந்திர மலையைத் தன் முதுகில் சுமந்து கடலைக் கடைய உதவியருளினார். இதுதான் (கமடம்) கூர்ம அவதாரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகன்ற முதுகினில் தோய்ந்தது குன்றம்
அடர்ந்து சுழித்ததால் தழும்பதுஒன்ற
மாதவ வந்தனை யாமையென வாழிய ! வாழிய நீ !!

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர்போற்றிப்
பெருவந்தனை செய்தறிதற்கரும் வெற்றியெய்தி
யருவந்தனையு மருவத்தையு மன்றி நின்றா
னொருவன் றனது பதந்தனை யுளத்துள் வைப்பாம்.

வருணன் மேற்கு திசைக்கு அதிபதி இதனால் தான் அவனுக்கு காட்சித் தந்த பெருமாளும் மேற்கு திசை நோக்கி கமடேஸ்வரராக சேவை சாதிக்கிறார்.

நிட்களராகிய (பரம்பொருள்) பரப்பிரம்மம். மெய்ஞானிகள் தியானத்தாலளவிடுத்தற் பொருட்டுச் சத்தி விகற்பமான கலைகளாரம்பப் பெற்று தியான மூர்த்தியாய் நிற்றல். அதாவது இரண்டாவதற்குப் பிரிது பொருளின்றித் தாமே பரம்பொருளாய் நிற்பவர். அருவுருத் திருமேனி.

கமலேஸ்வரி

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவாறு மானிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி போற்றுவாம்.

கால பைரவர்

பரமனை மதித்திடா பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப்போற்றி செய்குவோம்.

வடவாமுகாக்கினியின் மேற் சூழப் பெற்ற கருமேகப் படலம் போலவும், நஞ்சு போலவும் சிவந்த ஒளி பொருந்திய திருமேனியின் மேல் தரிக்கப்பட்ட பெரிய கருநிறச் சட்டையையுடைய வைரவக் கடவுளது அழகிய திருவடிகளை யாம் வணங்குவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரியன்

சூரியனை வழிபாடு செய்பவர்கள் காரிய சித்தி பெறுவார்கள் என்பதை அகத்திய மகரிஷி ஆதித்ய ஹிருதயத்தில்

ஜயதுஜயது சூர்யம் சப்த லோகைக தீபம்
கிரணசமித பாபகிலேச துக்கஸ்ய நாசம்
அருணகிரண கம்யம் ஆதிம் ஆதித்ய மூர்த்ததிம்
சகலபுவன வந்த்யம் பாஸ்கரம் தம் நமாமமி.

என்று மனமுருக பாடி வழிபடுவோம்.

சந்திரன்

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே உழன்ற வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு கூட்டு இனியே.

சந்திரன் குளிர்ந்த பார்வை குளிர்ந்த மனம் குளிர்ந்த உள்ளம் தண்ணளி பெற சந்திரனை வணங்குவோம்.

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்தில்

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும் என்றபடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணை நிலங்களுக்கும் அதி தெய்வம் கண்டு மொழிந்தார் தொல்காப்பியனார். பாலைக்கு அதி தெய்வம் கொற்றவை எனும் காளி தேவி மற்ற நானிலங்களுக்கு சேயோன், மாயோன், இந்திரன், வருணன் என்போர் ஆண் பாலராக அமைய பாலைக்கு மட்டும் பெண்பால் தெய்வத்தை எங்ஙனம் கண்டோர் முன்னோர் என்பதே ஓர் வியப்பாக இருக்கின்றது.

தேவிகாளிகாம்பாள் கொடும் பாலையில் வீற்றிருந்து அருளுவது மற்ற நானிலத்து வாழும் மக்களுக்கு ஏற்படும் கொடுமையினைக் களையவேயாகும் எனும் உண்மைக் குறிப்பே மிளிர்கின்றது.

அப்பனோடொப்ப ஆடிய பெருமை நம் அன்னை காளிக்கே உண்டு. மற்ற பெண்பால் தெய்வங்கள் ஆடியதாக எப்புராணத்தும் இல்லை எனலாம். அப்பனாம் இறைவன் ஆடுவது எதற்கெனின், அகிலமெலாம் இயங்க. அவனொடு அன்னைக் காளியும் ஆடினாள் என்றால் என்ன பொருள் ? அருளியக்கத்திற்கு அப்பன் என்றால் பொருளியக்கத்திற்கு காளிகாம்பாள் என்பதுதானே !

கல்வி, செல்வம், வீரம், வெற்றி மற்ற ஏதாவதாகிலும் வேண்டுவோருக்கு வேண்டுவதை அளிப்பின் நம் காளிகாம்பாளுக்கு நிகர் அவளேயாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

காளி – காளம் – நஞ்சை

வியாச பாரதத்தில் தருமர் வேண்டுவதாக காளி காளி மாகாளி நகச் சிரேஷ்டே

வில்லிபுத்தூரார்

யாமள மறையில் யாவரும் பணிவாள்
ஏழுவகை தாயாரில் ஒருத்தி
சாமள வடிவொடு அந்நகர் வாழ்வாள்
சங்கு தண்டு அங்கையிற் றரிப்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோமள வல்லி கொடிநிகர் காளி
கன்னி திருமால் காளி ஈசன்
காக்கும் கடிமதில் சூழ் மாமதுரை.

மகாபாரதக் காலத்தில் சாக்த வழிபாடு பாரத தேசத்தில் வேரூன்றி இருந்தது. சகலபுரக் காளிக்கோயில் மிகப் புகழ் பெற்ற தலமாகும். விராட பருவத்தில் துர்க்கையின் வாசஸ்தலம் விந்திய மலை என்று கூறப்பட்டுள்ளது. பீஷ்ம பருவத்தில் தேவியை சித்சோனானி (சித்தர்கள் தலைவி), குமாரி, காளி, கபாலி, கிருஷ்ண, பிங்களா, பத்ரகாளி, மகாகாளி, விஜய–ஜய, சாகம்பரி, கலா, காஸ்தா, சரஸ்வதி, சாவித்ரி எனப் பல பெயர் கொண்டு வழிபட்டனர் பாண்டவர்கள்.

கருவரை வாயில் காப்பவர் துவார பாலகிகள். வாயில் காப்பவர்களிடம் மணிக்கதவம் தாள் திறவாய் என்று பணிவுடன் விண்ணபிக்க வேண்டும். அவர்கள் ஒரு விரலைக் காட்டி, ஒருமைப் பட்டு வந்திருக்கிறாய் உள்ளே செல் என்று காட்டுவர்.

பிறகு அர்த்த மண்டபம் சென்று அம்பாளைத் தோத்திரம் செய்து வணங்கலாம்.

சர்வமங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதிகே
சரண்யே திரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

வணங்கி வழிபட்டு நிறை மனதுடன் வெளிப்பிரகாரம் அமைதியாக ஒருபுறத்தில் அமர்ந்து கோயிலுக்குள் வலமாக வந்து அம்பாள் முன் நின்று வணங்கிய காட்சியை கண்களை மூடி மனக் கண்ணால் கண்டு தரிசிக்க வேண்டும். அதுதான் நாம் செய்யும் தவம். சரண கமலாலயத்தை அரை நிமிட நேரமட்டில் தவம் முறை தியானம் செய்வதுதான் திருக்கோயில் தரிசனம். வழிபடுவோம் ; வணங்குவோம் ; வாழ்வோம்.

சத்தியமறிவாள் ! சாதனை புரிவாள் !!
சகலமும் அருள்வாள் காளிகாம்பாள் !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகா சரஸ்வதி

சக்திகளில் இளமையானவள் இவள் ; இவளே பிரபஞ்சத்தை (உலகை) நிர்வாகம் செய்கிறாள். மகேஸ்வரி பிரபஞ்ச சக்திகள் எப்படி இயங்க வேண்டும் என்று திட்டம் போட்டவள்.

மகாகாளி அந்த சக்திகளைச் செலுத்தி வேலை வாங்குகிறாள்.

மகாலட்சுமி அந்த சக்திகளைச் சுருதி சேர்த்துத் தாளம் தப்பாமல் இயங்குபடி செய்கிறாள்.

ஆனால் மகாசரஸ்வதியோ ஒவ்வொரு சிறுதுறையிலும் இறங்கி, சக்திகள் ஒத்துழைக்கின்றனவா என்று பார்க்கிறாள். பொறுமையோடு களைப்புக் கொள்ளாமல் வெகு கவனமாக வேலைகள் நடந்தேறும்படி செய்கிறாள்.

மனித வாழ்க்கையென்ற வீணையை மீட்டி அதைப் பேரின்பத்தோடு சுருதி சேர்க்க விரும்புவோமேயானால், நாம் நம்மைத் தாயின் கையில் ஒப்படைத்து விடவேண்டும்.

தாவறு முலகெலாந் தந்தநான் முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

ஸ்ரீகாளிகாம்பாளின் அருளை நாம் பெற்று, நம் மூலமாக அதை உலகத்துக்குப் பாய்ச்சி வானுலகத்தை மண்ணுலகத்துக்கு இழுத்து வந்து மனிதச் சாதியை கந்தர்வ சாதியாக உயர்த்த வேண்டும். இதையேதான் பாரதியாரும் சொன்னார்.

காளிகாம்பாளின் கருவறையில் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை மகா மேரு அம்பாள் அழகொழுகப் பார்த்திருக்கும் உயிரோவியமாய் அருளை வாரி வழங்குகின்றாள். ஆடவரும் பெண்டிரும் அம்பாள் அழகை அருகிருந்து பார்த்துப் பார்த்து பரவசம் அடைகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. வெள்ளிகிழமைகள்தோறும் கன்னி பூஜை நடத்திடவும், கோ பூஜை, திருவிளக்கு பூஜை நடத்திடவும், பௌர்ணமி தோறும் சண்டி ஹோமம் நடத்திடவும் ஏற்பாடு செய்ததும் தெய்வத்திரு. டாக்டர் தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியர் அவர்களின் பெரு முயற்சியே நூற்றுக்கணக்கான சுமங்கலிகள் அடங்கிய சுவாசினி சங்கம் என்ற ஓரமைப்பை நிறுவி. அவர்களைக் கொண்டு அதனைச்சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறார்கள். இவ்வரிய செயல் நடைபெறும் தலம் சென்னை நகரிலேயே இங்கு மட்டுத் தான். கன்னியர்க்கும் சுமங்கலிகட்கும் விசேஷ அருள் கிட்டும். இத்தலத்தில் வேண்டுதல் செய்து வரும் கன்னியருக்கு உடனே திருமணமாகும். இதுபோன்று அன்னையின் அருட்தன்மைக்கு பல சான்றுகள் கூற முடியும். அன்னையின் அருள்பெற்று ஆத்ம சுகமும், காரிய ஜெயமும் அடைந்த குடும்பங்கள் எண்ணிக்கையில் அடங்கா!
2. விஸ்வகர்ம வழிபாட்டுக் குழு பிரதி அமாவாசை தோறும் விஸ்வ பிரம்மத்திற்கும் ஸ்ரீ காயத்ரி தேவிக்கும் கூட்டு வழியாடு நடத்துகின்றனர்.
3. விஸ்வகர்ம பெருமக்கள் பௌர்ணமிதோறும் அன்னை ஸ்ரீ காளிகாம்பாளுக்கு கூட்டு வழிபாடு செய்கின்றனர்.
4. விஸ்வகர்ம கல்யாண குழு – ஐப்பசி சஷ்டியில் வடகதிர்காம முருகப் பெருமானுக்குத் திருக்கல்யாண உற்சவம் நடத்தி வருகின்றனர்.

ஆதிசங்கரர் தமிழ்நாட்டில் முக்கிய ஆலயங்களில் ஸ்ரீ சக்ரத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

1. காஞ்சி காமாட்சி அம்மை கோயிலுள்ள பிரசித்திப் பெற்ற காமகோடி பீடத்தில் ஸ்ரீ சக்ரம் ஸ்தாபிதமாயிருக்கிறது.
2. திருக்குற்றாலத்தில் பராசத்தி பீடத்திலும் ஸ்ரீ சக்ரம் பதிக்கப்பட்டிருக்கிறது.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

3. சிதம்பரத்தில் சிவசக்ரமும் ஸ்ரீ சக்ரமும் சேர்ந்த சம்மேளன சக்ரம் இருக்கிறது.

4. சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயிலில் மகாமேரு ஸ்ரீ சக்ரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

எல்லாம் கடந்து நிற்கும் ஆதிசக்தியானவள் எல்லா உலகங்களுக்கும் அப்பால் நின்று கொண்டு – இறைத் தத்துவத்தைத் தன் உணர்வில் தியானப் பொருளாகக் கொண்டு தவம் செய்கிறாள். அவள் மூலம் இறைத் தத்துவமானது சச்சிதானந்தமாக வெளிப்படுகிறது. ஈசுவர – சக்தியாகவும் புருஷப் பிரகிருதியாகவும் இருந்து அவள் பிரபஞ்சலீலையை நடத்துகிறாள். எல்லாம் அவள் : அவளின்றி அணுவும் அசையாது. !

மகாகாளியின் குணம் சக்திதான் ; எல்லையற்ற வல்லமை படைத்தவள் – எந்த இடையூற்றையும் தகர்த்து நொறுக்கி, எந்த எல்லையையும் மீறி இயங்குபவள். அசுரர்களுக்கு அவள் தன் கோர உருவத்தைக் காட்டுகிறாள். பொய் புலைமை, கயமை – இவற்றையெல்லாம் தயை தாட்சண்யமில்லாமல் உடனுக்குடனே சங்காரம் செய்கிறவள். அவளுடைய வெஞ்சினமும் ஆங்காரமும் எல்லையற்றவை.

சண்டீசர்

பூத கணங்கள் புடை சூழப்
புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த
விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர்ந்தே வெளிப்படலும்
கண்டு தொழுது மனங்களித்து
பாத மலர்கள் மேல்விழுந்தார்
பக்தி முதிர்ந்த பாலகனார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானது திருக்கரத்தினால் தீண்டப்பட்ட (விசார சருமர்) சண்டீசர். மாயைக்கிடமான உடம்பு சிவமயமாய் பொங்கி எழுந்த திருவருளில் மூழ்கினார். மாலயனாதி வானவரும் துதி செய்ய ஒளிமயமாக விளங்கினார். தொண்டர் தமக்கு அதிபராகும் பதவியையும், சிவபெருமான் உண்ட பரிகலம் உடுக்கும் உடை, அணிகலன் சூடும் திருமாலை முதலியவற்றுக்கு உரிமையாளராகும். சண்டீசர் பதத்தையும் விசார சருமருக்குத் தாமே வழுங்கினார் எம்பெருமான். தமது திருமுடி மீதிருந்த கொன்றை மலர் மாலையை இறைவர் விசார சருமருக்கு சூட்டியருளினார்.

சண்டீசர் என்பது ஒரு பதவி. சண்டீசர் இடையறாது தியானத்துடன் இருப்பார். அதனால் இவரது கோயிலுக்கும் தீர்த்தத் தொட்டிக்கும் இடையில் போகக் கூடாது. சிவாலய வழிபாடும் சண்டீசர் வழிபாடுடன் முடிவு பெறுகின்றன.

சிவ தரிசனம் முடிந்த பின் சண்டீசர் திருக்கோயிலை அடைந்து வணங்கி சிறிதே ஒலி வருமாறு கைகளைத் தட்டி தாம் பெற்ற சிவ நிர்மாலியங்களை (விபூதி, புஷ்பம்) அவரிடம் சேர்த்து சிவ தரிசனத்தின் பயனைத் தந்தருளுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

மகாலட்சுமி

இனிமையே வடிவானவள் இவள் ; இங்கிதம் நிறைந்தவள் இவள். பக்கத்திலிருந்தாலே நமக்கு ஆனந்தம் பொங்கும். அழகும் அன்பும் இசைவும் (ஹார்மனி) இருக்கும். இடமெல்லாம் இவள் இருப்பாள். அவையில்லாத இடத்தைவிட்டுச் சட்டென்று நீங்கி விடுவாள். அன்பினாலும் அழகாலும் ஆன்மாக்களை இறைவிக்கு அடிமையாக்குகிறாள் இவள்.

ஆழ்கஉள்ளம் சலன மில்லாது அண்டவெளிக் கண் அன்பினையே
சூழ்க துயர்கள் தொலைந்திடுக தொலைய இன்பம் விளைந்திடுக
வீழ்க கலியின் வலியெல்லாம் கிருத யுகந்தான் மேவுகவே

In Public domain. Digitization by Muthulakshmi Research Academy

5. கருணை கடாக்ஷி காளிகாம்பாள் !

அன்னை நெய்தல் நிலக் காமாட்சியாக அமர்ந்துள்ளார். தென் மேற்கு மூலையில் அண்ணாமலையார் உண்ணாமுலை அம்மையுடன் அமர்ந்து காட்சித் தருகிறார். திருமங்களஜோதி அணையாது ஒளிவீச அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் காற்று வடிவில் அண்ணாமலையாருக்கு ஒளி படைக்கும் சக்தியை அருள்பாலிக்கின்றாள் எனலாம்.

தமருகம், சூலம், கட்கம், கபாலம், கேடகம் முதலியன கொண்டு கோபரூபத்துடன் இருப்பவளே காளி என்று நாம் இதுவரை வழியட்டு வந்துள்ளோம். அவ்வண்ணமே தேவியின் ரூப தியானங்களும் கூறுகின்றது. ஆனால், நம் அன்னை சென்னை ஸ்ரீ காளிகாம்பாளின் ரூபத்தினை சற்றே நோக்குவோமாக. அன்னை எழில் கொஞ்சும் திருமேனி ஆணவ மலத்தை அடக்கும் அங்குசம். ஜென்ம பாப வலைதனில் இருந்து மீட்கும் பாசம், சுகபோகத்தினை நல்கும் நீலோத்பவ மலர் மற்றும் தன் திருவடிகளை தஞ்சமென அடைய உயிர்கட்குக் காட்டும் வரத முத்திரை, சோமன், சூரியன், அக்னி என்ற மூன்று கண்கள், நவரத்ன மணிமகுடம், வலது காலைத் தொங்க விட்டுக் கொண்டு அமர்ந்த கோலம் இவைகள் நமக்கு அச்சம் ஊட்டுவளவா ? அன்றி ஆனந்தம் அளிக்கும் தேவியா ?

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை அகற்றி க்ஷேமமான பாதையினைக் காட்டி சம்சார சமுத்திரத்தில் உழலும் ஜீவாத்மாக்களை தனது திருவடி கமலமெனும் பரமஞான தத்துவத்தினை சரணடை என்றல்லவா சொல்கிறது ?

அன்னையின் இத்திருமேனி, அன்னை ஸ்ரீலலிதா பரமேஸ்வரியின் ரூபம் கொண்டது. ஆனந்த வாழ்வளிக்கும் அன்னை, வேண்டுபவர்க்கு வேண்டுவன அளித்து ஆனந்தம் நல்கும் அமுத வாரிதியே நம் அன்னை வரப்ரதாயினி. வேத நாதமாய், சுக வாரிதியாய், ஞானச் சுடராய் விளங்கி பெருங்கருணையோடு ஜீவன்களைக் காத்து அருளும் அன்னையினைக் காண கண்கள் கோடி வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னே அவளின் அழகு ! என்னே அவளின் கருணை ! என்னே அவளின் அன்பு ! என்னே அவளின் பரிவு ! என்னே அவளின் அரிய சாந்தம் ! என்னே அவளின் பிரகாசம் ! ஆகா ! சொல்ல வார்த்தைகள் இல்லை. ஆம், அன்னையின் கருணையை அனுபவித்தவர்க்கே அது விளங்கும். ஆம் ! உண்மையில் இவள் காளி இல்லை ! கருணா கடாக்ஷியே !!

உலகினில் கெட்ப் பிள்ளை இருக்கலாம். ஆனால், கொடிய அன்னை இருப்பதாக வரலாறில்லை. இருக்கின்ற பிடி சோறும் தனக்கென எண்ணாது கொடுக்கின்ற கோயில் அல்லவா தாய் ! காளி என்ற கோரமுகத்துடனும், கொடிய ஆயுதங்களுடனும், கழுத்தினில் கபால மாலை தரித்தவளுமாக காட்சியளிப்பவள் என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது. உண்மையில் கொடுமைகளை அழித்து நல்லவர்களை காக்கும் பொருட்டு அன்னை எடுத்து அவதாரமே காளிகாம்பாள் திரு அவதாரம். காலனையே விரட்டுவதனால் அவள் காளி என பெயர் பெற்றாள்.

அஞ்ஞானமய இருளை அகற்றி மெய்ஞ்ஞானமய ஒளியை ஏற்றும் பரிபூரண ஞானமாகிய ஆனந்த ரூபிணியே ஸ்ரீ காளிகாம்பாள். அன்னையின் பெருமையினை உலகிற்கு உணர்த்தவே அப்பன் தன் மேனியில் இடப்பகுதியினை அளித்து அர்த்தநாரீஸ்வரரானார் அன்றோ ? நமது உடலில் இதயம் இருக்கும் பகுதியே இடப்பகுதியல்லவா ? எனவேதான். தாய்மைக்குக் கருணை அதிகமோ ?

இறைவனைச் சரணம் என்றடைந்த மார்க்கண்டேயனைக் காக்கும் பொருட்டு, காட்சியளித்த பரம்பொருள் காலனை தமது இடதுக் காலால் அல்லவா ? உதைக்கின்றார். ஆம் ! இடப்பகுதி அன்னையின் பகுதி எங்கே பிள்ளைக்குக் காலனால் இடைஞ்சல் வந்துவிடுமோ ? என எண்ணி முந்திக் கொள்ளுகிறது அன்னையின் பாதம்.

போற்றி வழிபடத் தகுந்தவள் தாய், எனவேதான், மனுநீதி நூலில்,

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

உபாத்யானம் தசம் ஆச்சார்ய ஆச்சார்யானாம் சதம் பிதா
ஸ்கஸாந்து பிதரம் மாதா கௌரவேண த்ருச்யதே !

அதாவது, ஆச்சார்யன் உபாத்யாயனைவிட பத்து மடங்கும், தந்தை ஆச்சார்யனைவிட நூறு மடங்கும். தாயானவள் தந்தையைக் காட்டிலும் ஆயிரம் மடங்கும் உயர்வாக மதித்துப் போற்றி வழிப்படத் தக்கவள் என்கிறது மனுநீதி சாஸ்திரம். எவ்வளவோ பொல்லாத பிள்ளைகளை ஆட்கொள்ள வேண்டி அன்னை தானாக முன் வந்து அருள் செய்கிறாள். உதாரணமாக, ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் இடையனின் நாவில் சூலாயுதத்தால் பிரணவ மந்திரம் எழுதி அவனைத் தனது தாசனாக்கிக் கொண்டாள் அல்லவா ?

தாம்பூல பூரித முகீ தாடிமீ குசுமப்ரபா என்ற லலிதா சஹஸ்ர நாமத்தில் கூறும் அந்த அன்னையின் பெருமையினை மகாகவி காளிதாசனும் பெற்று பரம்பினான் அன்றோ அந்த கவிஞன்.

இனிய்பு, புளிய்பு என்று சுவைக்கூட்டு ; மடப்பள்ளி சமையல் காரனாக இருந்தவனின் வாயில் தனது தாம்பூல எச்சிலை உமிழ்ந்து கவிக்கே தலைவனாக கவிக்காளமேகப் புலவனாக் கியதும் அன்னையின் பெருங் கருணையே யன்றோ ?

சக்தி வழிபாடு

ஸ்ரீ ஆதி சங்கரர் இறைவனை அடையும் மார்க்கங்களை ஆறு வகையாகப் பிரிக்கிறார்.

கணபதியை வழிபடும் முறை	காணபத்யம்
முருகனை வழிபடும் முறை	கௌமாரம்
சிவனை வழிபடும் முறை	சைவம்
விஷ்ணுவை வழிபடும் முறை	வைஷ்ணவம்
சக்தியை வழிபடும் முறை	சாக்தம்
இயற்கையை (சூரியனை) வழிபடும் முறை	சௌரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றில் அன்னையை வழிபட்டு பெருமை அடைந்தவர்கள் பலர்.

'கருணைக் கடலாகிய அன்னையை', 'ஓம் கருணா ரஸ ஸாகராய நம' என லலிதா சஹஸ்ர நாமம் சொல்கிறது. அந்த அன்னையின் பூரண அனுக்ரஹம் பெற்றவர்தான் கவி காளமேகம், மகாகவி காளிதாசர், கம்ப நாட்டாழ்வார், அபிராமி பட்டர், திருஞானசம்பந்தர் முதலான பெருமக்கள்.

'சக்தியில்லையேல் சிவமில்லை', எத்துணை எளிமையான வாக்கியம். உண்மையில் நமது உடம்பில் சக்தியில்லாதபோது நாம் அமைதியாக சிவனே என்று அல்லவா ? இருக்கின்றோம். சக்தி என்ற சொல்லுக்கு தைரியம், ஆற்றல் என்று பொருள். சக்தியினை வழிபடுவதனால் அவள் பாருள் எப்பொழுதும் இருப்பதனால் நாம் என்றும் சுகமாக இருக்கலாம் அல்லவா ?

பரம புருஷனான ஸ்ரீமன் நாராயணன் தனது தேவியான ஸ்ரீ லட்சுமிக்கு தனது இதயத்தில் இடமளித்தான். நான்முகன் பிரம்மனோ தனது நாவில் அல்லவா சரஸ்வதிக்கு இடமளித்தான்.

சக்தியின் பெருமையை உணர்ந்த பரம்பொருள் தனது இடபாகத்தை அருளினாள். இறைவனே மாதொரு பாகனாய் இருப்பதனால் அல்லவா துன்பத்தில் உள்ள அடியவர்களை உடனே காக்கின்றாள்.

சிவனுக்கு ஓர் இரவுதான் சிவராத்திரி. ஆனால், அம்பிக்கைக்கு ஒன்பது நாள் நவராத்திரி.

இந்த அன்னையே உலகில் முதலில் தோன்றினாள். உலகப் படைப்புக்கு என பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திரன், சூரியன் என்ற ஐவரை முறையே சிருஷ்டி – படைப்பு, ஸ்திதி – காத்தல், சம்ஹாரம் – அழித்தல், திரோபாவம் – மறைத்தல், அனுக்ரஹம் – அருளல் என்ற பஞ்சக் கிருத்தியங்களைச் செய்தல் பொருட்டு தோற்றுவித்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்கட்கு துணையாக இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, ஆதி சக்தி, மஹா சக்தி என்ற ஐந்து தேவியர்களின் அம்சமாக முறையே சரஸ்வதி, மகாலட்சுமி, பார்வதி, இந்திராணி, சாயாதேவி ஆகியவர்களை அன்னை அளித்தாள்.

அன்னை போகங்களை அருளும் காலத்தில் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியாகவும், புவனேஸ்வரியாகவும் காட்சி தந்து இகபர சௌபாக்யங்களை நல்குகின்றாள். அன்னை அதர்மங்களை அழித்து தர்மங்களை நிலைநாட்ட வேண்டும் பொழுது அவளே தர்ம சம்வர்த்தினியாக, ஸ்ரீ துர்க்கையாக மாறுகின்றாள். சும்பன், நிகம்பன், மகிஷன் போன்றவர்களை அழித்து தர்மங்களை நிலைநிறுத்தி நல்லவர்களைக் காக்கின்றாள்.

மக்கள் வணங்கும் மாகாளி

சிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் எல்லா இடங்களிலும் காண முடியாது. ஆனால், ஊர்த்தேவதை யாண்டும் உண்டு. காளி, மாகாளி, காளியாத்தாள் என பல பெயர்கள் ஊர்த் தேவதைக்கு உண்டு. சிதம்பரத்தில் தில்லைக் காளி. காஞ்சியில் காமாட்சி, மகாபலிபுரத்தில் கொற்றவை. திருவாரூரில் ராஜ துர்க்கை, கோவையில் கோளமாகாளி, கோணியம்மன் பாரியூரில் குண்டத்துக் காளி, கீரனூரில் செல்வி, செங்கோட்டில் காளி, காரைக்குடி கொப்புடையம்மன், பெரியபாளையத்தில் பவானி, பொய்கை நல்லூரில் துர்க்காளி, திருவொற்றியூரில் வடிவுடையம்மன், சென்னையில் சென்னம்மன் என ஊர்த் தேவதைகளுக்கு பெயரிட்டு மக்கள் வழிபடுகின்றனர்.

எல்லையம்மன், எல்லைப் பிடாரி, எல்லைப் பார்த்தவள், வடக்கு வாய்ச் செல்வி, கருக்காத்தாள் முதலிய பெயர்களுடன் ஊரில் எல்லை காக்கும் காவல் தெய்வமாகவும் காளிகாம்பாளை பிரதிஷ்டை செய்து வழிபடுவது உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழகத்துத் தெற்கு எல்லை காக்கும் தெய்வமாக குமரியம்மன் இன்றும் வீற்றிருக்கிறாள்.

தெய்வத்தை வழிபடுபவர் குழந்தை உள்ளம் படைத்தவர் ஆகின்றார். குழந்தை உள்ளம் படைத்த பக்தர்கள் தெய்வத்தைத் தாயாகவே காண்கின்றனர். தாயாக வழிபடும் முறை பாரதத்தில் இந்து சமயத்தில்தான் பரிபூரண நிலையைப் பெற்றுள்ளது.

உலக வாழ்க்கையை வெறுத்து விரக்தியுடன் வந்து தரிசனம் செய்யும் பக்தனுக்கு முக்தி என்ற பெண்ணைத் திருமணம் செய்யும் சக்தி கொண்டவள் அம்பிகை – காளிகாம்பாள் ஆவாள்.

இவ்வுலகமே தேவியின் வடிவமானது ; ஆண்டத்திலுள்ளது பிண்டத்திலுள்ளது என்பதால் அம்பிகை பிண்டமான இவ்வுடலிலும் இருக்கிறாள். இதை உணர்த்துவதே தேவி உபாசனை.

ஸ்ரீ சக்ரத்தின் ரகசியம்

ஸ்ரீ சக்ரம் மேரு மலை வடிவினது. அது ஒன்றோடொன்று சந்திக்கும் மேற்புற, கீழ்ப்புறக் கோணங்களால் ஆனது. 43 முக்கோணங்களை உள்ளடக்கியது. இவற்றைச் சுற்றி எட்டு தளம் ; அதன் மேல் 16 தளம் ; அதைச் சுற்றி மூன்று வட்டங்கள் ; கடைசியில் நான்கு வாயில்களுடன் கூடிய மூன்று கோடுகளாலான சதுரம்.

ஸ்ரீ சக்ரத்தின் பூசனை முறைகள்

சரீரத்தில் மட்டும் வைத்துப் பூசிப்பது சமய மதம் ; வெளியில் மட்டும் வைத்துப் பூசிப்பது கௌல மதம்.

சரீரத்தில் ஸ்ரீ சக்ரத்தைப் பாவித்துப் பூசிப்பதும் வெளியில் வைத்துப் பூசிப்பதும் மித்ர மதம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சக்ர நாயகி

அம்பாளின் மகிமையைச் சௌந்தர்ய லஹரியில் ஆதிசங்கரர், அம்மா ! ஒன்பது சுற்றுப் பிரகாரங்களை உடைய வாசஸ்தனத்தின் உள்ளுக்குள்ளே அந்தப்புரத்தில் பரப்பிரம்ம சொரூபமன பரமேஸ்வரனுடன் நீ சேர்ந்திருக்கிறாய். அந்த அந்தப்புரத்துக்கு அருகில் வரவே எவருக்கும் யோக்கியதை இல்லை. வெளியிலே ஒன்பது சுற்றுக்களையும் தாண்டியிருக்கிற வாசலில்தான் மகாப் பெரிய இந்திராதி தேவர்களும் காத்துக் கிடக்கிறார்கள். அந்த வெளி வாசலில் காவல் செய்கிற அணிமா முதலிய சித்திகளே இந்திராதி தேவர்களுக்கு அஷ்டமா சித்திகளைக் கொடுத்து விடுகிறார்கள் என்கிறார்.

இந்த ஒன்பது கட்டு அரண்மனைதான் ஸ்ரீ சக்ரம் என்கிற அம்பாள் யந்திரம். ரூபமேயில்லாத பராசக்தி திவ்யமங்கள வடிவத்துடன் அங்க அவயங்களோடு காமேஸ்வரியாக காளிகாம்பாளாக வந்த மாதிரி இந்த ரூபமேயில்லாத பராசக்தி திவ்யமங்கள வடிவத்துடன் அங்க அவயங்களோடு காமேஸ்வரியாக காளிகாம்பாளக வந்த மாதிரி இந்த யந்திர ரூபத்திலும் இருக்கிறாள்.

பஞ்ச சக்திகள்

காளிகாம்பாள் கருவரை சுற்றுச் சுவரில் பஞ்ச சக்திகளாகிய பராசக்தி – ஆதி சக்தி – இச்சா சக்தி – ஞான சக்தி – கிரியா சக்தி – அனுக்ரஹம் – மறைப்பு – கருணை – காப்பு – படைப்பு. ஐந்தொழில்களைப் புரிந்து அருள்புரிகின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. சென்னை பெயர் வரக் காரணம்

சென்னையம்மனை சென்னம்மன் என்று தெலுங்கரும் கன்னடரும் அழைத்தனர். இன்றும் அவர் தம் மொழியில் சென்னபுரி என்றே அழைக்கின்றனர். சென்னைபுரி ஆந்திர மகா சபை எனும் பெயரைக் காண்க!

சென்ன என்னும் சொல்லிற்கு முருகு, அழகு, இளமை, வலிமை, கம்பீரம் எனப் பல பொருள் உண்டு.

கடவுள் பெயரையே குழந்தைகளுக்கு இடும் வழக்கம் அன்றும் இன்றும் என்றும் உள்ளது. சென்னப்ப நாயக்கனுக்கும் அவனது தங்கை சென்னம்மாவுக்கு பெயரிடக் காரணமாயிருந்தவள் சென்னைக் குப்பத்தின் காளியம்மனே. இக்காளியம்மனுக்கு பட்டினவரும். விசுவகர்மர்களும் செந்தூரம் பூசி வழிபட்டதால் அத்தேவி சென்னம்மன் ஆயினள்.

புராணங்களில் சென்னம்மன் குப்பத்திலிருந்த காளிகாம்பாளை நெய்தல் நிலக் காமாட்சி என்று கூறப்பட்டுள்ளது. காஞ்சிபுரக் காமாட்சி வேறு என அறியலாம்.

கேட்ட வரங் கொடுக்கும் தேவியாக விளங்கியதால் நெய்தல் நிலக் காமாட்சியைச் செல்வரும், வறியவரும், கல்லாரும் கற்றாரும் சென்னம்மனை வணங்கிச் சென்றார்கள்.

இக்குப்பத்தின் தேவியருளால் பிறந்த ஒரு செல்விக்கு சென்னம்மா என்று பெயர். அச்சென்னம்மா கீழ்த்திருப்பதியில் கோயில் திருப்பணி செய்ததாக கல்வெட்டொன்று கூறுகின்றது. (பார்வை : 1492 எண்ணுள்ள திருப்பதிக் கல்வெட்டு) கீழ்த் திருப்பதியைச் சேர்ந்த கோவிந்தராஜப் பெருமாள் கோயிலும் கல்வெட்டும் வடசுவரில் சில சிலைகளும் உள்ளன. கோபுரச் சுவர்களில் ஆங்காங்குக் காணும் தெய்வீகச் சிற்பங்கள் உருவாக்கப்பட காரணமாக இருந்தவர்கள் திருவேங்கடநாதராஜரும் அவரது மனைவி சென்னம்மாவுமே என்பதை இன்னொரு கல்வெட்டு குறிக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(பார்வை : 28-3-1970ல் வெளியான சுதேசமித்திரன் ஞாயிறு மலர்)

சென்னப்பட்டினம் காவிரிப் புகும் பட்டினம் போன்று சங்கக் காலப் பட்டினமாகும். பழைய கற்கால ஆயுதங்களும் பொருட்களும் சென்னை கிண்டியருகே அரசினரால் கண்டெடுக்கப்பட்டது.

சென்னம்மனுக்குச் சார்த்தும் சிவப்புப் புடவை திருவிழா காலங்களில் ஊர்வலத்துக்காகக் காளிக்கு கட்டும் ஒருவகை ஆடையைக் குறிப்பதே சென்னை எனும் சொல். சென்னை, கூறை நாடு வாங்கி வந்தேன் எனில் இடவாகு பெயராக அவ்விடங்களில் குறும்பரால் நெய்த துணிகளையே குறிக்கும்.

சென்னை ஆடைகளையும், புடவைகளையும் நெய்துவிற்கவே காஞ்சியிலிருந்தும் வாலாஜாவிலிருந்தும் நெசவாளர்களைச் சிந்தாதரிப்பேட்டையில் குடியேற்றினர் ஆங்கிலேயர். இன்றும் அன்று வந்த பட்டு நூற்காரர் எனும் சாதியினரை சிந்தாதரிப்பேட்டையில் காணலாம்.

பேரிச் செட்டியார் தம் சரக்குகளை விற்க பேரிகை பேரிகாளிகாம்பாள் கோயில் பேரிப்பேட்டை விசுவகருமர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. காளி கோயில் விழாவினையும், கோயில் மூர்த்தியின் புறப்பாட்டினையும் அறிவிக்கும் டமாரத்தைச் சென்னை என்றே கூறினர் பக்தர்.

சென்னம்மன் குப்பத்திலிருந்தே காளிக் கோயிலை ஆங்கிலேயர்

1. கல்யாண டெம்பில் (Kalyana Temple)
2. கௌளியான பகோடா (Cawleyana Pagoda)
3. காரணேஸ்வரி டெம்பில் (Karaneswari Temple)
4. காமீஸ்வரி பகோடா (Comisery Pagoda) என்றும் அழைத்தனர்.

(பார்வை : வரலாற்று நூல் தொகுப்பு 3. பக். 338, 338 N 3, 258 W 6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னம்மாள் - அழகான அம்மை.

சென்னபுரி - அழகான கோட்டை.

சென்னை - அழகு (கன்னடம்)

பாளையக்காரர்கள், மதறாஸ் குப்பத்தை ஆங்கிலேயர் தம் கோட்டையை (சென்னபுரி) கட்ட கேட்டபோது ஓர் உடன் படிக்கையோடு கொடுத்தார்கள். அவ்வொப்பந்தமாவது மதராஸ், சென்னை, ஆறு குப்பங்களிலுள்ள அருள்மிகு கோயில்களைக் கண்போல் பாதுகாத்து உதவுதல் வேண்டும் என்பதேயாம். இம்மூன்று குப்பங்களை கி.பி. 1733லும் 1802லும் வரைந்த தேசப்படங்களில் காணலாம்.

இன்றுள்ள யுத்த நினைவுச் சின்ன மண்டபமே ஆறு குப்பம் இருந்த இடம். வடவாறு கூவம் நதியோடு கலந்து விட்டது. இன்று சால்ட் கோட்டர்ஸ் என்னுமிடமே மேலப்பேட்டையாக ஏலம்பூர் (எழும்பூர்) நதிக்கரையிலிருந்தது. அவ்வாற்று நீர் உப்பு எடுப்பதற்கும் காய்ச்சுவதற்கும் ஏற்றதாக இருந்ததால் மேலப்பட்டை முழுவதும் உப்பளங்களாக மாற்றப்பட்டது.

1. கி.பி. 2ம் நூற்றாண்டில் கிரேக்கர் திருமயிலையை - மல்லியர்பா Malliarpha என்றும் 1639ல் ஆங்கிலேயர் பீகாக் டவுன் Peacock Town என்றும் அழைத்தனர்.

2. சென்னைக் குப்பத்திலுள்ள முத்தியாலுப்பேட்டையை பேரல் டவுன் Pearl Town என்றும் பகடாலுப்பேட்டையை (தெலுங்கு) பவழக்காரத் தெரு Coral Town என்றும் அழைத்தனர்.

3. செங்கற்பட்டை லோடஸ் டவுன் Lotus Town என்றும் கூறினர்.

4. கி.பி. 17ம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் உலாந்தர் (Hollanders) பழவேற்காடு (Pulicat) சதுரங்கப்பட்டினம் (Sadras) நித்திய கல்யாணபுரம் (Covelong கோவளம்) என்னும் கடற்கரைப் பகுதிகளில் வசித்த சுதேசிகளோடு பருத்தி ஆடைகளையும் பொன் ஆபரணங்களையும் விற்று வாணிபம் செய்தனர்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்றும் இவ்வியாபாரம் செய்யும் காசுக்கடைச் செட்டிமார்களையும், அணிகலத் தொழிலாளர்களாகிய பஞ்ச புத்திரர்களையும் (விசுவகர்மர்) மிகப் பலராக முத்தியாலுப்பேட்டையில் (சென்னைக் குப்பம்) காணலாம். இவ்விரு குலத்தவர்களே அதிகமான சென்னம்மன் வழிபாட்டினைத் தினசரி செய்த விழாக்கள் பல செய்கின்ற உபய கர்த்தர்களாவர்.

நாளெல்லாம் திருநாளே என்று சொல்லத்தக்க வகையிலே, இத்திருக்கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நடக்கின்றன. சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை 365 நாட்களும் விழாக்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. தமிழகம் தவிர மலேசியா, சிங்கப்பூர், கொழும்பு, மொரிஷீயஸ் நாட்டு அன்பர்களும் இங்கு வந்து அம்பாளைத் தரிசிக்கின்றனர். சித்திரை – வைகாசியில் இங்கு பிரம்மோற்சவம் 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. ஆடிப் பெருவிழா, பத்து ஞாயிற்றுக்கிழமைகளில் அபிஷேக அலங்காரங்களுடன் மிகச் சிறப்புடன் நடைபெறுகின்றது.

நவ சக்திகள் – நவராத்திரி நாட்களில் நவசக்திகள் ஒன்பது பெயர்களுடன் சக்தி ரூபத்தில் ஒளி வீசுகிறாள்.

1.	மனோண்மணி	குமாரி
2.	சர்வபூத தமணி	திருமூர்த்தி
3.	பலப்பிரம்மதமணி	கல்யாணி
4.	கலவி கரணி	ரோஹிணி
5.	பலவிக்கரணி	காளிகா
6.	காளி	சண்டிகா
7.	ரௌத்ரி	சாம்பவி
8.	ஜ்யேஷ்டை	துர்க்கை
9.	வாமை	சுபத்திரா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. கோட்டையில் குடியிருந்த கோமகள் தல வரலாறு

அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் முதலில் தோன்றி அருள்பாலித்துக் கொண்டிருந்த இடம் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை ஆகும்.

கிழக்கிந்திய கம்பெனியார் சென்னைப் பகுதியிலிருந்த மூன்று குப்பங்களை (1. சென்னைக் குப்பம் 2. மதராஸ் குப்பம் 3. வடவாறு குப்பம்) 1639ம் ஆண்டு விலைக்கு வாங்கினார்.

பண்டகச் சாலைக் கட்டிட வேலை 1640ம் ஆண்டு மார்ச் மாதம் 1ந் தேதி தொடங்கப்பட்டது. இக்கட்டிடத்தின் ஒரு பகுதியை ஏப்ரல் 23ம் தேதி செயிண்ட் ஜார்ஜ் என்பவர் கட்டி முடித்ததால், இதற்கு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயரிட்டனர். (ஆதாரம் – சென்னை மாநகர், திரு. மா.சு. சம்பந்தன், பக். 35, 36) அதாவது, மதராஸ் குப்பத்தில்தான் ஆங்கிலேயர்கள் கோட்டையைக் கட்டிக் கொண்டனர். இப்பகுதியை அவர்கள் வெள்ளையர் பட்டினம் என்று அழைத்தனர். சுதேசிகள் வாழ்ந்த சென்னைக் குப்பத்தை கறுப்பர் பட்டினம் என்றழைத்தனர்.

கோட்டைப் பகுதிகள், பாதுகாப்பான இடமாக இருந்ததால், ஆலய வழிபாட்டுக்குக் குந்தமாக இருந்தது. இதனை உணர்ந்த ஆங்கிலேயர்கள் தாமாகவே முன் வந்து, விஸ்வகர்மர்களிடம், உங்கள் கடவுள்களை எங்கே வைத்து வழிபட விரும்புகிறீர்களோ, அங்கு வைத்துக் கொள்ளலாம். அதற்குத்தக்க வசதி செய்து தரப்படும் என்ற கூறினர். அதன்படி, விஸ்வகர்மர்கள் தாம் வணங்கிய ஸ்ரீ காளிகாம்பாளை, சென்னை, தம்புச் செட்டித் தெருவில் நிர்மாணித்து திருக்கோயில் எழுப்பினர் என்பது வரலாறு.

கோட்டையம்மன்

கோட்டைப் பகுதியில் கோயில் கொண்டிருந்ததால், இந்த அம்மனைக் கோட்டையம்மன் என அழைக்கலாயினர். ஸ்ரீ காளிகாம்பாளை செந்தூரம் பூசி வழிபட்டதால், சென்னம்மன் என்றும் போற்றினர். சென்னையம்மன் குப்பமே, சென்னை நகரமானது. சென்னையம்மனை, சென்னம்மன் என்று தெலுங்கரும், கர்நாடகரும் அழைத்தனர். இன்றும் அவர்தம் மொழிகளில் இந்நகரைச் சென்னபுரி என்றே அழைக்கின்றனர் என்று இத்திருக்கோயிலின் முன்னாள் அறங்காவலர் அமரர் மகா வித்வான் பண்டித வி. நடேசனார் அவர்கள் தம்முடைய ஆய்வுக் குறிப்பு ஒன்றில் கூறியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னையின் அருமையும் பெருமையும்

இத்திருக்கோயில் பற்றிய விரிவான வரலாற்றுக் குறிப்புகளை எச்.டி, லவ் என்னும் ஆங்கிலேயர் எழுதி வைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயமானது விஸ்வகர்ம சமூகத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு அவர்களாலேயே பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. 1933ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய நிர்வாகத் திட்டத்தின் கீழ் (ஸ்கீம்) சென்னை நகரில் வசிக்கும் விஸ்வகர்ம சமூகத்தினரால் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர்களால் சிறப்பாக நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில் சென்னை நகரிலுள்ள பிரசித்திப் பெற்ற திருக்கோயில்களில் ஒன்றாகும். திருவேகம்பம் என்கிற சிவகாஞ்சி பாரத தேசத்திலுள்ள சப்த நகரங்களில் ஒன்றாகும். மகரிஷி ஒருவர், ஒரு காலத்தில் திருவண்ணாமலையைத் தரிசித்து, காஞ்சியைத் தரிசிக்க வந்தார். அவர் நைமிசாரண்யத்தில் உள்ள மகிரிஷிகளைப் பார்த்து, காஞ்சிபுரம் – திருவாண்ணாமலையுமாக இரண்டு தலங்களையும் ஏக காலத்தில் கண்டு தரிசித்தப் பயனைப் பெறுவதற்கு மகிமை மிகுந்த தலமெது என்று கேட்டபோது, சூத புராணிகர் சொன்னதாவது : பூர்வம் ஒரு காலத்தில் பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான அருணையும் காஞ்சியும் சேர்ந்த மகிமை மிகுந்த தலம். சிவசக்தி தலமாகவும், இரண்டு பூதங்கள் இணைந்த தலம் பரதபுரி, சொர்ணபுரி என்றெல்லாம் வழங்கப்பட்டும், இஷ்ட காம்யார்த்த சித்திகளைச் சீக்கிரத்தில் அளிக்கும் சிவசக்தி தலம் இதுவே காளிகாம்பாள் இலங்கும் இத்திருத்தலம். மகாலக்ஷ்மியும் மகா சரஸ்வதியும் தம் இரு கண்களாகத் தன்னகத்தே அமையப் பெற்றவள் ஸ்ரீ காளிகாம்பாள் இவளாதலின், செல்வமும், கல்வியும் குவிந்துள்ள திருநகரமாகச் சென்னை விளங்குகின்றது. எனவே, இவ்வன்னையை வழிபட மேற்கண்ட தலங்களை ஒருங்கே வழிபட்ட பலன் கிட்டும் என்று கூறுகின்றார்.

இராஜ கோபுரம்

22.1.1976 அன்று தவத்திரு சுவாமி இராமதாசர் மற்றும் அறங்காவலர் குழுத் தலைவர் பிரம்மஸ்ரீ டி.எஸ். ராஜப்பா அவர்கள் தலைமையில் இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 21.1.1983 அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வாறே இராஜகோபுரத்தின் வாயிலுக்கு உட்புறம் இருந்த திறந்த வெளியில் ஸ்ரீ காயத்ரி மஹா மண்டபத்தில் 20.11.1982 அன்று மண்டபத் திருப்பணி தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டது.

26.1.2010 அன்று முன்னாள் அமைச்சர் மாண்புமிகு கா. இராசராம் அவர்கள் தலைமையிலும் திருப்பணிக் குழுத் தலைவர் தவத்திரு. சுவாமி இராமதாசர், பிரம்மஸ்ரீ ஆர். ஏழுமலை ஆச்சாரி மற்றும் அறங்காவலர் குழுத் தலைவர் பிரம்மஸ்ரீ டி. ஈஸ்வரமூர்த்தி ஆச்சாரி, பி.எஸ்.சி. அவர்கள் முன்னிலையிலும் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, வெளிப்பிரகார மண்டபம் மற்றும் தூண்களுக்கு அழகிய சுதை வேலைப்பாடுகள் செய்து பஞ்சவர்ணங்கள் தீட்டப்பட்டு, மூல ஸ்தானத்தில் சுவற்றிலும் தரையிலும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டு 29.1.2001 அன்று மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

7.2.2012 அன்று மேற்கு நூதன வாயில் இராஜகோபுர கும்பாபிஷேகமும், நந்தன வருடம் 2013ல் மஹா கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது.

மேற்கு நோக்கிய சன்னதி

அன்னையின் ஆலயம் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. ஏன் ? எதற்கு ? என்ற வினா நம்முள் எழுகின்றது. ஆம் ! உண்மையே ! கிழக்கு (பூர்வாபி முகம்) நோக்கிய சன்னதிக்கு எத்துணை சிறப்புகள் உண்டோ அத்துனை சிறப்புகளைக் காட்டிலும் கூடுதலாக மேற்கு நோக்கிய (பச்சிமாபி முகம்) சன்னிதிக்கு உண்டு.

பாரத நாட்டில் மேற்கு நோக்கிய சன்னதிகள்

1.	காசி	விஸ்வேஸ்வரர்
2.	திருக்காளத்தி	காளத்தி நாதர்
3.	சென்னை	ஸ்ரீ காளிகாம்பாள்
4.	திருமயிலை	கபாலீஸ்வரர்
5.	திருவான்மியூர்	வான்மீகநாதர் (மருந்தீஸ்வரர்)
6.	திருக்காஞ்சி	வரதராஜப் பெருமாள்
7.	திருவாணைக்கா	ஜலகண்டேஸ்வரர்
8.	திருச்சி	தாயுமானவர்
9.	பழனி	முருகப் பெருமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுபோன்ற ஆதாரங்களை ஆய்ந்து பார்க்கின்றபோது இவைகள் அனைத்தும் விஸ்வகர்மாவால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனவே மேற்கு பார்த்த சன்னிதானங்கள் அனைத்தும் விஸ்வகர்ம செழுமரபினர்கட்கு பாத்தியப்பட்டது.

பிரதிஷ்டை செய்யப்பட்டதும் போற்றி வழிபாடாற்றப்படுவதும் ஆகும் என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

எனவே, அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயம் விஸ்வகர்ம சமுதாயத்தினருக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் மேற்கு நோக்கிய திருச்சன்னதி கொண்டுள்ளது பெருமகிழ்ச்சியான செய்தியன்றோ !

ஸ்தல விருட்சம்

ஒரு ஆலயம் எழுப்புவதற்கு முன்பு அவ்விடத்தில் அதன் மூல வழிபாடு ஒரு மரத்தின் கீழிருந்துதான் தொடங்கப்படுகிறது. எந்த மரத்தின் கீழிருந்து அவ்வழிபாடு தொடங்கப் பெற்றதோ அம்மரம் அந்த க்ஷேத்திரத்தின் ஸ்தல விருக்ஷமாகி சிறப்பு பெறுகின்றது. அத்தல விருட்சத்திற்கு ஒரு தனி வழிபாடு செய்தல் நமது இறை பக்தியின் சின்னமாகும்.

இத்திருக்கோயிலின் தீர்த்தம் கடல் நீர், தல விருட்சம் மாமரம், தீர்த்தத்துக்குரிய பரிவார தேவதை கடற்கன்னி என்பனவாகும்.

நற்றவத்தால் பிறந்த ஆன்மா இறை நோக்கமாகவே இருக்கும். அனைத்து உயிரையும் அணைக்கும். அவ்வுயிரை இறைவனே வந்து அழைத்துப் போவார். அவ்வுயிரும் பரமனையே நாடும் – பிறரை நாடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. திருக்கோயில் திருவிழாக்கள்

தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுந்துள்ளன. கோயில்களில் தான் வழிபாடு, சிறப்பு வழிபாடு ஆகியவை நடைபெற்று வருகின்றன.

எடுக்கும் விழாவும் நன்னாள் விழாவும் என்று திருஞான சம்பந்தர் பாடியுள்ளார்.

திருக்குறளில் சிறப்பொடு பூசனை எனக் குறிப்பிடப்படுகிறது. பூசனை, நன்னாள் விழா என்பன நாள்தோறும் நடைபெறுவன.

வடமொழியில் நித்திய பூசை எனப்படும். சிறப்பு எடுக்கும் விழா என்பன விழா கால வழிபாடுகளாகும்.

வடமொழியில் நைமித்திகம் எனப்படும். சிறப்பு வழிபாடு.

இத்திருக்கோவிலில் ஒவ்வொரு மாதமும் விழா காலங்களே.

சித்திரையில் சித்ரா பௌர்ணமி அன்று திருவிளக்கு பூஜை நடைபெறுகின்றது.

ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயிலில் பிரம்ம உற்சவ விழா வைகாசித் திங்களில் நடைபெறுகிறது. 10 அல்லது 12 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

திருவிழா தொடங்குவதற்கு முன்னாள் மண்ணெடுத்தல் - முளையிடுதல் நடைபெறும். மண்ணெடுத்து சுத்தம் செய்து பதஞ் செய்து அதில் விதைகளை (நவதான்யம்) இட்டு முளைக்க வைப்பர். முதல் கொடியேற்றம் நடைபெறும். அம்மன் ஆலயத்தில் சிம்மக் கொடி ஏற்றப் பெறுகின்றது.

துணியில் எழுதப் பெற்று வழிபாட்டில் வைத்து பூசித்துக் கயிற்றில் கட்டி கொடி மரத்தின் உச்சியில் ஏற்றுவர். திருவிழாவிற்கு வரும் அடியவர்களைத் திருவருள் உயர்த்தி நற்கதி செலுத்தும் என்பதே இதன் அடிப்படை புண்மையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்று மூஞ்சுறு வாகனத்தில் ஸ்ரீ விநாயகப் பெருமாள் வீதியுலா நடைபெறுகிறது.

2ம் நாள் காலை சூரியப் பிரபையிலும் மாலை சந்திரப் பிரபையிலும் இறைவி எழுந்தருளி உலா வருவர்.

உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் வாழ்வதற்குச் சூரிய வெப்பம் மிகவும் தேவை. சூரிய வெப்பம் நீர் நிலைகளில் உள்ள நீரை நீராவியாக்கி மேகமாக மாற்றுகிறது. மேகம் மழையாகப் பெய்கிறது. உலக வாழ்க்கைக்குச் சூரிய ஒளி துணை செய்கின்றது. சந்திரன் இன்பத்தைத் தருகின்றார்.

சூரிய – சந்திர பிரபைகளில் உலா வருவது காத்தல் தொழிலைக் குறிக்கின்றது.

3ம் நாள் பூத வாகனம், சிம்ஹ வாகனங்களில் உலா வருவதுண்டு. பூதம் இறைவன் சொரூபம் பெற்றது. சிம்மம் ஆற்றல் மிக்கது. பூத கணங்கள் இறந்த ஆன்மாக்களைக் கொண்டு செல்லும். சிங்கம் பிற விலங்கினங்களைக் கொன்று தின்னும். இரண்டும் அழித்தல் தொழிலுக்குரியன. எனவே, பூத வாகனம், சிம்ஹ வாகனம் ஆகியவற்றில் உலா வருதல் அழித்தல் தொழிலைக் குறிக்கும்.

4ம் நாள் ரிஷப வாகனத்தில் உலா வருதுண்டு. காமதேனுபாலை மடியில் மறைத்துள்ளது. மறைத்துக் கொண்டு வேண்டும் போது வெளிப்படுத்தும் இறைவி மறைந்திருந்தே அருள் செய்வாள். எனவே, மறைத்தலைக் (திரோபம்) குறிக்கும்.

5ம் நாள் சிம்ம வாகன இன்பக் காட்சியாகும்.

ரிஷபம் மாசு அற்றது ; வெண்மையானது ; மலம் நீங்கி அருளுடன் கூடிய ஞானத்தைக் காட்டி நிற்கின்றது. இந்த 5 ம் நாள் (அநுக்ரஹம்) அருளைக் குறிக்கும். ஆதலால் 5ம் நாள் பக்தர்களுக்கு மிகவும் சிறப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6ம் நாள் வெள்ளை யானையில் உலா வருவது உண்டு. (யானையின் இரண்டு காதுகளும், தும்பிக்கையும் ஆடும் ; இரண்டு கண்களும் உருளும் ; இது போன்ற யானை வாகனம் இந்தியாவில் சில கோயில்களில் மட்டுமே உள்ளது.)

யானை ஒரே பிண்டமான பருத்த உடல், கால்கள் முதலியவற்றை உடையது. விலங்கினங்களில் மிகப் பெரியது ; ஆற்றல் மிக்கது ; பாகன் தன் காலில் அடி வைத்தால் மேலே ஏற உதவுவது ; கட்ட விரும்பினால் தானே சங்கிலியை எடுத்துத் தருவது. இத்தகைய யானைமேல் இறைவி உலா வருவது பக்தி வலையில் படுவோன் காண்க (திருவாசகம்) என்பதற்கேற்ப அடியார் பக்திக்கு இரங்கி அருள்புரிவாள் என்பதைக் குறிக்கும்.

7ம் நாள் தேர்த்திருவிழா பண்டைக்காலத்தில் அரசர்களுக்குத்தேரே சிறந்த வாகனமாகும். தேர்களில் மிகச் சிறந்த உயர்ந்த தேரைக் கடவுளர் வீதி வலத்திற்குப் பயன்படுத்தினர். இறைவன் பூமியாகிய தேரில் ஏறித் துன்பம் செய்த திரிபுராந்தவர்களை அழித்து மற்றவர்களைக் காத்தான். தீமை அழித்து அடியார்களைக் காப்பது தேர்த் திருவிழாவாகும்.

8ம் நாள் இறைவி குதிரை வாகனத்தில் உலா வருவாள். குதிரைக்கு வாசி என்றோர் பெயருண்டு. வாசி யோகத்தைச் சுட்டும் யோகியர்க்கு எளிதில் அருள் செய்வாள் என்பதனைக் குறிக்கும். அன்னம் நீரைவிட்டுப் பாலைப் பருகும். அம்மை குற்றம் நீக்கிக் குணம் பாராட்டுவாள். கிளி சொன்னதைச் சொல்லும். அம்மை உயிரினங்களுக்கு திருவருள் வீழ்ச்சியை (சத்திநிபாதம்) தருவாள் என்பதையும் ; வாழ்க்கையில் பக்தியினால் இழந்ததை மீண்டும் பெறலாம் என்பதையே இவ்விழாக் குறிக்கின்றது.

9ம் நாள் தெப்பத் திருவிழாவிற்குப் பதில் திருக்குளம் இல்லாததால் இரவுத் தேர் ஸ்ரீ சக்ரத் தேர் (கிண்ணித் தேர்) கிண்கிணி ஒசையில் தேர் நகர்ந்து வருவதுபோல் இறைவனடியார்கள் அன்பு வெள்ளத்தில் (ஓசையில்) அலை ஓசையில் மிதந்து அருள் செய்வாள் என்பதைக் காட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10ம் நாள் நடராசர் தரிசனமாகும். அதிகாலையில் அருள்தரும் சிவகாமி அம்மைக்கும் அருள்மிகு நடராசப் பெருமானுக்கும் திருமஞ்சனம் செய்து வீதியில் உலா வரச் செய்தல். (வெளியில் வந்ததும் பட்டி கற்றல் நடைபெறும். ஆடு, மாடு அடைக்குமிடம் பட்டியாகும். கால்நடைகளுக்கும் இறைவன் இரங்கி அருள் செய்கிறான் என்பதைக் குறிக்கும். இந்நிகழ்ச்சி கொங்கு நாட்டிற்கே உரியது.

திருவிழாக்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும்.

நடராசர் தரிசனம் ஐந்து தொழில்களையும் ஒன்றாகக் காட்டுவாகும்.

உடுக்கை ஏந்தியுள்ளது	படைத்தலையும்
அபய கரம்	காத்தலையும்
கையில் அக்னியை	அழித்தலையும்
முயலகன் மீது ஊன்றிய பாதம்	மறைத்தலையும்
எடுத்தப் பொற்பாதம்	அருளையும் குறிக்கும்

10ம் நாள் நடராஜர் வீதியுலா முடிந்ததும் தீர்த்தவாரி எனக் கொண்டாடப்படுகிறது. இறைவன் அருள் பெற்ற உயிரினங்கள் இறைவனின் அருட்பெருக்கில் அமிழ்வதைக் குறிக்கும்.

திருக்கோயில்களில் வீற்றிருந்து அருள்புரியும் ஸ்ரீ காளிகாம்பாள் உற்சவ மூர்த்தியாக எழுந்தருளி அடியவர்களுக்கு வெளி வந்து அருள் செய்கிறாள் என்பதே அடிப்படையாகும்.

"இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி"
"பந்தனை விரவியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே."

என்ற மணிவாசகர் வாக்கை நிலைநாட்டுவதே திருவிழாக்களின் தத்துவமாகும்.

10ம் நாள் காலை ஸ்ரீ நடராஜர் உற்சவமும், பின்பு தீர்த்தவாரி உற்சவமும், அன்று இரவு விசாகத்தை முன்னிட்டு ஆறுமுக ஸ்வாமி உற்சவமும், கொடி இறக்கமும் நடைவெறுகின்றது. அடுத்து பந்தம் பறி உற்சவமும், அதற்கு மறுநாள் ஸ்ரீ உற்சவமூர்த்தி ஸ்ரீ அம்பாளுக்கும் மற்றுமுள்ள உற்சவமூர்த்திகளுக்கும் சாந்தி அபிஷேகம் நடைவெறுகின்றது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மோற்சவத்தினை முன்னிட்டு ஸ்ரீ நடராஜர் மண்டபத்திற்கு வருகைபுரிந்த உற்சவ மூர்த்தி அம்பாள் அமாவாசை அன்று தன் ஆஸ்தானத்திற்கு செல்லும் ஆஸ்தான பிரவேச உற்சவமும் நடைபெறும். அதற்கு மறுநாள் அம்பாளின் விஸ்வ ரூப தரிசனமும் நடைபெறுகின்றது.

ஆனி மாத விழா

ஆனி மாதம் ஸ்ரீ அம்பாளுக்கு வசந்த உற்சவம் நடைபெறும்.

ஆடி மாத விழா

